நீர்ப்பாசனம் மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சு

# நீர் வளச் சபை

# ஆண்டறிக்கை

# 2011

# ஆண்டறிக்கை – 2011

## நீர்வளங்கள் சபை

### 1. அறிமுகவுரை

நீர்வளங்கள் சபையானது 1964ஆம் ஆண்டின் 29ஆம் இலக்கச்சட்டத்தின் கீழ் 1966ஆம் ஆண்டில் இலங்கையிலுள்ள நீர்வளங்களின் கட்டுப்பாடு மற்றும் பயன்படுத்தல் சம்பந்தப்பட்ட சகல விடயங்களிலும் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்கானவொரு ஆலோசனைச் சபையாக நிறுவப்பட்டது.

1978ஆம் ஆண்டில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிலத்தடி நீர்ப் பிரிவானது நீர்வளங்கள் சபைக்கு கைமாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் இச் சபையின் பணிகள் விசாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கையிலுள்ள நிலத்தடி நீர்வளங்கள் தொடர்பிலான விடயங்களுக்கு கூடுதலான முக்கியத்துவம் வழங்குவதை இயலச் செய்வதன் பொருட்டு நீர்வளங்கள் சபைச்சட்டம் திருத்தப்பட்டு 1999ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

### 2. தொலைநோக்கு

அனைவருக்கும் சுத்தமானதும் பாதுகாப்பானதுமான நீரை பெறுவதை இயலுமாக்குதல்

### 3. செயற்பணி

கிராமிய சமூகத்துடனும் இயைபுள்ள மத்திய மற்றும் உள்ளூராட்சி திணைக்களங்கள் / பிரிவுகள்/அதிகாரபீடங்கள்/நிறுவனங்கள் / தேசிய மற்றும் இந்நாட்டிலும் வெளிநாடுகளிலுமுள்ள சர்வதேச அமைப்புகள், விஞ்ஞான சமூகங்கள் ஆகியவற்றுடன் நெருக்கமாக ஒன்றிணைந்து செயற்பட்டு குறிப்பாக இந்நாட்டிலுள்ள நிலத்தடி நீர்வளங்களை மதிப்பிடுவதிலும் பராமரிப்பதிலும் அதிகரிப்பதிலும் அபிவிருத்தி செய்வதிலும் அரசாங்கத்திற்கும் சிக்கனமாகப் பயன்படுத்துவதிலும் மக்களுக்கும் ஆலோசனை வழங்குதல்.

### 4. குறிக்கோள்கள்

(அ) நிலத்தடி நீர் வளங்களை மதிப்படுவதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமாக ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்.

(ஆ) நிலத்தடி நீர் வளங்கள் பற்றிய தரவு சேகரித்தல்.

(இ) நீர் புவிச்சரிதவியல் அளவைகளை மேற்கொள்ளுதல்

(ஈ) நிலத்தடி நீர் வளங்களின் பயன்படுத்துகை பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல்

(உ) நிலத்தடி நீர் கருத்திட்டங்களை மதிப்பீடு செய்தல்

(ஊ) ஏனைய நிறுவனங்களின் கூட்டிணைப்புடன் இச்சபையின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்

### 5. பணிகள்

(அ) இலங்கையின் நிலத்தடி நீர்வளங்கள் பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்.

(ஆ) நிலத்தடி நீர்வளங்கள் அபிவிருத்தி மீதான தரவின் பொருள்கோடல்.

(இ) நிலத்தடி நீர் வளங்களைக் கண்டு பிடிப்பதற்காக நீர் புவிச்சரிதவியல் அளவைகளை நடாத்துதல்.

(ஈ) நிலத்தடி நீர்வள வலயங்களைக் கண்டறிதல்.

(உ) புவிச்சரித விஞ்ஞான முறைகளை பயன்படுத்தி நிலத்தடி நீர் மூலங்களை கண்டறிதல்.

(ஊ) நிலத்தடி நீர் வளங்கள் அபிவிருத்திக்கான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

(எ) நீர் மாதிரிகளை இரசாயன ரீதியாகவும் பற்றீரியா ரீதியாகவும் மற்றும் கனரக உலோகங்களுக்காகவும் பகுப்பாய்வு செய்தல்.

(ஏ) நிலத்தடி நீர்த் தரவைச் சேகரிதலும் பேணி வைத்திருத்தலும் நீர் புவியியல் படங்களைத் தயாரித்தலும்.

## 6. பணிப்பாளர்கள் சபை

(01) திரு.பந்துல முனசிங்கா – தலைவர்

(02) கலாநிதி சிசிர கோதாரகொட – தொழிற்படு பணிப்பாளர்

(03) திரு.எம்.ஏ.பீ.ஹேமச்சந்திரா – பணிப்பாளர்

(04) திரு.ஆர்.பி.சி.ரத்தினமலல்ல – பணிப்பாளர்

(05) திரு.ஆர்.எம்.சி.ரத்நாயக்கா – பணிப்பாளர்

(06) திருமதி.சிறியாணி பெரேரா – பணிப்பாளர்

(07) திரு.அசங்க தயாரத்தின – திரைசேரிப் பிரதிநிதி

### 6.1 சபைக் கூட்டங்கள்

மீளாய்வாண்டில் ஏழு சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

### 6.2 கணக்காய்வு, முகாமைத்துவக் குழு

(01) திரு.ஆர்.பி.சி.ரத்தினமாலா – தலைவர் - பணிப்பாளர்

(02) கலாநிதி சிசிர கோதாகொட – உறுப்பினர் - தொழிற்படு பணிப்பாளர்

(03) திரு.எம்.ஏ.பீ.ஹேமச்சந்திரா – உறுப்பினர் - பணிப்பாளர்

(04) திரு.ஆர்.எஸ்.விஜேசேகரா – செயலாளர் - பொது முகாமையாளர்

(05) திரு.அசங்கா தயாரத்தினா – உறுப்பினர் - திறைசேரிப் பிரதிநிதி

#### 6.2.1 கணக்காய்வு, முகாமைத்துவக்குழுக் கூட்டங்கள்

ஐந்து (05) கணக்காய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் அமைச்சில் நடாத்தப்பட்ட மூன்று (03) முகாமைத்துவக்குழுக் கூட்டங்களில் பங்குபற்றப்பட்டுள்ளது.

### 6.3. சிரேட்ட நிறைவேற்று உத்தியோகத்தர்கள் - 2011ஆம் ஆண்டு

(01) திரு.ஆர்.எஸ்.விஜேசேகர – பொது முகாமையாளர்

(02) திரு.ஜே.வீரக்கோன் - பிரதி பொது முகாமையாளர் (நீர் புவிச்சரிதவியல்)

(03) திரு.ஏ.பி.எம்.சந்திரசிறி – உதவிப் பொது முகாமையாளர் (நிதி)

(04) திரு.எம்.ஏ.புஸ்பகுமார உதவிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்)

(05) திரு.நிஹால் வெல்லலாளீக – உதவிப் பொது முகாமையாளர் (துளையிடுதல்)

(06) திரு.ஜி.ஆர்.ஆர்.கருணாரத்தின – உதவிப் பொது முகாமையாளர் (நீர்ப் புவிச்சரிதவியல்) (2011.12.01ஆம் திகதி தொடக்கம்)

(07) திரு.பீ.பீ.எஸ்.ஆர்.கே.பத்திரன – உதவிப் பொது முகாமையாளர் (தொழிற்பாடுகள்) (2011.12.01ஆந் திகதி தொடக்கம்)

(08) திரு.எம்.ஜே.தேசப்பிரிய – உதவிப் பொது முகாமையாளர் (பொறியியல்) (2011.12.01ஆந் திகதி தொடக்கம்)

## 7. 2011ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தொழிற்பாட்டு நடவடிக்கைகள்

திறைசேரி நிதியங்களின் கீழ் பின்வரும் ஆராய்ச்சி ஆய்வுகள் செய்யப்பட்டன.

### 7.1 கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வரை நீடித்திருக்கும் கரையோர மணல் நீர் தாங்கு படுக்கை பற்றிய நீர் புவிச்சரிதவியல் ஆய்வு

<u>அறிமுகப்படுத்தல்</u>

கொழும்பு, கம்பஹா மாவட்டங்களின் கரையோரப் பிரதேசத்தில் அமைந்துள்ள மணல் களிமண் நீர் தாங்கு படுக்கை பற்றிய நீர் புவிச்சரிதவியல் ஆய்வும் ஆழமற்ற மணல் நீர் தாங்கு படுக்கையின் கேத்திர கணிதத்தின் நிர்ணயமும். நீர் புவிச்சரிதவியல் ஆய்விற்கு இப் பிரதேசம் தெரிவு செய்யப்பட்டமைக்கான பின்வருவன சில காரணங்களாக இருந்தன.

1. வெவ்வேறு அமைப்புகளினாலும் தனிப்பட்டவர்களினாலும் கணிசமான அளவு நிலத்தடி நீர் பம்புதல் மூலம் எடுத்துப் பயன்படுத்தப்படுகின்றது. (முதலீட்டுச்சபை, கட்டுநாயக்கா விமான நிலையம், ஹோட்டல்கள் முதலியன)
2. இப்பிரதேசத்தில் 50ற்கும் மேற்பட்ட நூற்று வீதத்தினர் தோண்டிய கிணறுகள், குழாய்க்கிணறுகளின் நீரில் தங்கியுள்ளனர்.
3. ஆய்வுப் பிரதேசத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நகரமயப்படுத்துகையும் கைத்தொழில் மயப்படுத்தலும்.

**குறிக்கோள்**

நீர்தாங்கு படுக்கையை பேணி வைத்திருத்தல்

**குறிக்கப்பட்ட குறிக்கோள்**

1. நீர்தாங்கு படுக்கையின் கேத்திர கணிதத்தின் மீதும் மற்றும் நிலத்தடி நீரின் தரத்தின் மீதும் அளவின் மீதும் தரவு சேகரித்தல்.
2. நிலத்தடி நீரின் எடுத்தல் அளவுகளையும் நிலத்தடி நீரை மீளவும் நிரப்புவதற்கு பொருத்தமான பிரதேசங்களையும் கண்டறிதல்
3. நிலத்தடி நீர் கண்காணித்தல் வலையமைப்பை மேம்படுத்துதல்
4. நீர்தாங்கு படுக்கையின் கையாளுகையை நீண்டகாலக் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டம் மூலமாக செய்தல்

**முறையியல்**

1. தரவு இடைவெளிகளின் ஏற்கனவேயுள்ள தரவையும் கண்டறிதலையும் சுருக்கமாக கூறுதல்.
2. அடித்தளப் படங்களைத் தயாரித்தல்
3. இரசாயன சுற்று வட்ட எல்லைகளுக்காக நீர்த்தரத்தின் தற்போதைய நிலையைக் கண்டறிவதன் பொருட்டு அங்கொன்றும் இங்கொன்றுமாக நீர் மாதிரியெடுத்தலும் நீர் மாதிரி

எடுத்தல்களை பகுப்பாய்வு செய்தலும்.

4. புவிப் பௌதிக ஆய்வுகளைச் செய்து பரிசோதனைக் கிணறுகளுக்கான சாதகமான அமைவிடங்களை கண்டறிதல்

5. பரிசோதனைக் கிணறுகளின் துளையிடுதல்

6. கிணறுகளின் மட்டுப்படுத்துதலும் பரிசோதனைக் கிணறுகள் மீது பம்பும் பரிசோதனைகளைச் செய்தலும்.

7. நீண்டகாலக் கண்காணிப்பிற்காக நிலத்தடி நீர் கண்காணிப்பு வலையமைப்பை நிறுவுதல்

**7.2 அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள நீர்த்தர மாற்றங்களைப் பற்றிய ஆய்வு**

**குறிக்கோள்**

இந்த ஆய்வின் முக்கியமான குறிக்கோள் அநுராதபுரத்தில் மேற்பரப்பு நீரினதும் குறைந்த ஆழத்திலும் மிகவும் ஆழத்திலும் உள்ள நிலத்தடி நீரினதும் நீர்த்தர மாற்றங்களை கண்டறிவதாகவிருந்தது.

**ஆய்வுப் பிரதேசம்**

ஆய்வுப் பிரதேசமானது அநுராதபுரத்தில் உள்ள பின்வரும் ஐந்து (05) ஆற்றுப்படுக்கைகளை உள்ளடக்குகின்றது.

- மோதரகம் ஆறு
- கலா ஓயா
- மல்வத்து ஓயா
- மா ஓயா

**7.3 ஓரிட மூலங்களை பயன்படுத்துவதன் மூலம் புத்தளம் மாவட்டத்தில் நீரின் தரம் பற்றிய ஆய்வு**

**7.4 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவியுடன் மன்னார் மாவட்டத்தில் மீள் குடியமர்த்தல் சமூகத்திற்கான கைப்பம்பு குழாய்க் கிணறுக் கருத்திட்டம்**

**2011ஆம் ஆண்டிற்கானது**

196 நீர் புவிச்சரிதவியல் விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

103 குழாய்க் கிணறுகளும் 24 பரிசோதனைக் கிணறுகளும் பூர்த்தி செய்யப்பட்டன.

57 பம்பு பரிசோதனைகள் செய்யப்பட்டன

71 கிணறுகளுக்கு கைப் பம்புகள் பொருத்தப்பட்டதுடன் 05 கிணறுகளுக்கு ஆழமான கிணற்று பம்புகள் பொருத்தப்பட்டன.

57 கிணறுகள் சுத்திகரிக்கப்பட்டன.

57 பம்பு பரிசோதனைகள் செய்யப்பட்டன

**மாகாண ரீதியாகவும் பகுதி ரீதியாகவும் மேற்போந்த நடவடிக்கைகளின் விவரங்கள் பின்வருமாறு**

## 8. வட மாகாணம்

### 8.1 ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புச் சபையின் உதவியுடன் மன்னாரில் மீள்குடியமர்த்தல் கருத்திட்டம் குறிக்கோள்

சிறிய அளவிலான கிராமிய நீர்வழங்கல் திட்டங்கள் மூலமாக குடி நீரையும் வீட்டுத் தேவை நோக்கங்களுக்குத் தேவைப்படும் நீரையும் வழங்குவதே இக் கருத்திட்டத்தின் குறிக்கோளாக இருந்தது.

**அமைவிடம்**

இக்கருத்திட்டம் மன்னார் மாவட்டத்தில் நான்கு (04) பிரதேச மாவட்ட பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

| பிரதேச மாவட்ட பிரிவு | கிராம உத்தியோகத்தர் பிரிவு | கிராமம் | பூர்த்தி செய்யப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| மன்னார் நகரம் | பரப்பங்கண்டல் | சிறிக்குளம் | குழாய்க் கிணறு ஒன்றின் நிருமாணம், நீர்த்தரத்தின் பரிசோதனை, பிறப்பாக்கி ஒன்றினதும் பம்பு ஒன்றினதும் நிறுவுகை |
| நானாட்டான் | செட்டியாமாகன், கட்டை அடம்பன் | செட்டியாமாகன், கட்டை அடம்பன் | குழாய்க் கிணறு ஒன்றின் நிருமாணம், நீர்த்தரத்தின் பரிசோதனை, பிறப்பாக்கி ஒன்றினதும் பம்பு ஒன்றினதும் நிறுவுகை |
| மாந்தை கிழக்கு | வெள்ளாங்குளம் | சேவா கிராமம் | 02 பிறப்பாக்கிகளினதும் 02 பம்புகளினதும் நிறுவுகை |
| | | கணேசபுரம் | 02 பிறப்பாக்கிகளினதும் 02 பம்புகளினதும் நிறுவுகை |
| | பலியாறு | பலியாறு | குழாய்க் கிணறு ஒன்றின் சுத்தப்படுத்தலும் புனரமைப்பும் நீர்த்தரத்தின் பரிசோதனையும் கைப்பம்பு ஒன்றின் பொருத்துகையும். |
| மடு | விளாத்திக்குளம் | விளாத்திக்குளம் | குழாய்க் கிணறு ஒன்றின் சுத்தப்படுத்தலும் புனரமைப்பும் நீர்த்தரத்தின் பரிசோதனையும் கைப்பம்பு ஒன்றின் பொருத்துகையும். |
| | பரசங்குளம் | பரசங்குளம் | குழாய்க் கிணறு ஒன்றின் சுத்தப்படுத்தலும் புனரமைப்பும் நீர்த்தரத்தின் பரிசோதனையும் கைப்பம்பு ஒன்றின் பொருத்துகையும். |
| | | சின்ன வளையன்காடு | குழாய்க் கிணறு ஒன்றின் சுத்தப்படுத்தலும் புனரமைப்பும் நீர்த்தரத்தின் பரிசோதனையும் கைப்பம்பு ஒன்றின் பொருத்துகையும். |

இக் கருத்திட்டத்தின் கீழ் ஒன்பது (09) குழாய்க் கிணறுகள் நிருமாணிக்கப்பட்டதுடன் ஆறு (06) பம்பும் பரிசோதனைகள் நிறைவேற்றப்பட்டன. ஆறு (06) நீர்மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளதுடன் மூன்று (03) கைப்பம்புகள் பொருத்தப்பட்டுள்ளன. இத்துடன் கூடுதலாக ஒன்பது நீருக்குள் தாழ்த்தப்படக் கூடிய ஒன்பது (09) பம்புகளும் எட்டு (08) பிறப்பாக்கிகளும் பொருத்தப்பட்டுள்ளன. ஒரு அமைவிடத்திற்கான மின் கம்பித் தொடர்பு செய்யப்பட்டது. இக் கருத்திட்டத்தின் மொத்தப் பெறுமதி 24.207 மில்லியன் ரூபாவாகும்.

### 8.2 ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச சிறுவர்கள் கல்வி நிதியக்கருத்திட்டம் - முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள்.

சுகாதார நிலையங்களுக்கும் மருத்துவசாலைகளுக்குமாக ஐந்து (05) தோண்டிய கிணறுகள் நிருமாணிக்கப்பட்டுள்ளதுடன் பாடசாலைகளுக்காக ஆறு (06) கைபொருத்தப்பட்ட குழாய்க் கிணறுகளும் நிருமாணிக்கப்பட்டுள்ளன. இக் கருத்திட்டத்தின் மொத்தப் பெறுமதி 3.48 மில்லியன் ரூபாவாகும்.

## 9. மேல் மாகாணம்

**2011ஆம் ஆண்டில் பின்வரும் வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.**

நீர் புவிச்சரிதவியல் அளவைகள் - 36

குழாய்க் கிணறுகளின் நிருமாணம் - 11

நிறைவேற்றப்பட்ட பம்பு பரிசோதனைகள் - 07

குழாய்க் கிணறு சுத்தமாக்குதல் - 51

இரசாயன ரீதியாக பரிசோதனை செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை – 191

பரிசீலனை செய்யப்பட்ட பற்றீரியா மாதிரிகள் - 91

நீருக்கடியில் வைக்கத்தக்க பம்புகளின் எண்ணிக்கை – 03

2011ஆம் ஆண்டில் மேல் மாகாணத்தினால் சம்பாதிக்கப்பட்ட மொத்த வருமானம் 11.5 மில்லியன் ரூபாவிலிருந்து.

## 10. வடமத்திய மாகாணம்

கிளிநொச்சி, அநுராதபுரம், கண்டி மாவட்டங்களில் நீர்ப்புவிச்சரிதவியல் அளவைகளைச் செய்ததன் மூலம் அநுராதபுரம், ஹொரக்கக்வேவவிலுள்ள மாகாண அலுவலகம் 663,800.00 ரூபாவை சம்பாதித்துள்ளது. 2011ம் ஆண்டில் அநுராதபுரம் மற்றும் கண்டி மாவட்டங்களில் குழாய்க் கிணறு நிருமாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு 4,946,812.80 ரூபா சம்பாதிக்கப்பட்டுள்ளது. பம்பு பரிசோதனையையும் பம்பு நிறுவுதலையும் மேற்கொண்டதன் மூலம் 675,480.00 ரூபா சம்பாதிக்கப்பட்டுள்ளது. மாகாண அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள பாசோதனைக் கூடத்தினால் நீர்வழங்கல் திட்டங்களின் நீர் மாதிரிகள் இரசாயன ரீதியாகவும் பற்றீரியா ரீதியாகவும் பரிசோதிக்கப்பட்டதுடன் 474, 716.19 ரூபா சம்பாதிக்கப்பட்டுள்ளது. இந்த மாகாண சபையுடன் இணைக்கப்பட்டுள்ள சுற்றுப் பயண வங்களாவின் சம்பாத்தியம் 129,784.00 ரூபாவாக இருந்தது.

### 10.1 நீரூற்றுகள் பற்றிய ஆய்வும் பராமரிப்பும்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அநுராதபுரம் மாவட்டத்தில் 35 நீரூற்றுகள் ஆய்வு செய்வதற்காக தெரிவு செய்யப்பட்டன. இவை கெபத்திகொல்லாவை, பலகல்ல, பளுகஸ்வேவா, ஹொரவப்பொத்தானை, கலன்பிந்துவேவா பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் அமைந்துள்ளன. பராமரிப்புக்கு ஏற்கனவே உட்படுத்தப்பட்டுள்ள நீரூற்றுகள் பின்வரும் அட்டவணையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளன.

| இல. | பிரதேசச் செயலாளர் பிரிவு | நீரூற்றின் பெயர் | நன்மை பெறும் குடும்பங்கள் (ஏறக்குறைய) |
|---|---|---|---|
| 01 | பலகல்ல | தெலதின்னவேவா | 20 |
| 02 | கலன்பிந்துவேவ | ஹெரந்திய உல்பொத்த | 100 |




**அபிவிருத்திக்கு பின் ஓர் நீரூற்று**

திறைசேரி இக் கருத்திட்டத்திற்கு நிதியங்களை வழங்கியுள்ளது.

**10.2 ஆராய்ச்சி, பயற்சி நிலையம் - ஹொரக்ககவேவா**

(அ) நீர் சம்பந்தப்பட்ட நோய்களை ஆகக் குறைப்பது பற்றி விழிப்புணர்வை ஊட்டுவதற்கான மூன்று நாட்கள் வதிவு நிகழ்ச்சித்திட்டம்

1.1 வட மத்திய மாகாணத்தில் பரவிக் கொண்டிருக்கும் நாட்பட்ட சிறுநீரக நோயையும் ஏனைய நீர் சம்பந்தப்பட்ட நோய்களையும் கட்டுப்படுத்தும் நோக்குடன் அப்பிரதேசங்களிலுள்ள கிராமிய மக்களுக்கு அறிவூட்டுவதற்காக ஆராய்ச்சி. பயிற்சி நிலையத்தினால் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குப்படுத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டமானது கிராமிய மக்களை இலக்கு வைத்து இரண்டு கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டன. 2011ஆம் ஆண்டிற்கு நிதியங்கள் திறைசேரியினால் வழங்கப்பட்டன.

நாட்பட்ட சிறுநீரக நோய் அறிவிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள கிராமிய மக்களுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருக்கும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மருத்துவிச்சிகள், கிராம உத்தியோகத்தர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், கமத்தொழில் ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர்கள் போன்ற அரசாங்க உத்தியோகத்தர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் இந்த நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியுள்ளனர். இது மூன்று நாள் வதிவு பயிற்சி நிகழ்ச்சித் திட்டமென்பதுடன் இதில் கல்வி பயிற்சி நெறிச் சாதனங்களும் உணவும் உறைவிடமும் இலவசமாக வழங்கப்படுகின்றது. நீர் வளங்கள் சபையின் ஆராய்ச்சி பயிற்சி நிலையத்தினால் பங்குபற்றுபவர்களுக்கு சான்றிதழ் ஒன்று வழங்கப்படுகின்றது.

**பங்குபற்றுபவர்கள்**

2011 சனவரி மாதத்திலிருந்து திசெம்பர் வரையுள்ள காலப்பகுதியில் பத்து (10) நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித் திட்டங்களில் அநுராதபுரம், பொலன்னறுவை, குருநாகல் ஆகிய இடங்களிலிருந்து இருநூற்றி மூன்று (203) உத்தியோகத்தர்கள் பங்கு பற்றியுள்ளனர். பங்கு பற்றியவர்களின் நிரல் பின்வருமாறு.

| பதவிப்பெயர் | மாவட்டங்கள் | | |
|---|---|---|---|
| | அநுராதபுரம் | பொலன்னறுவை | குருநாகல் |
| பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் | 05 | 04 | - |
| மருத்துவிச்சிமார்கள் | 15 | 02 | - |
| சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | 20 | 02 | 06 |
| கிராம உத்தியோகத்தர்கள் | 35 | 06 | 07 |
| ஆசிரியர்கள் | 34 | - | - |
| கமத்தொழில் ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர்கள் | - | 30 | - |
| சமூக சுகாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | 37 | - | - |



**பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றில் பங்கு பற்றியவர்கள்**

**கல்வி நெறிப் பொருளடக்கம்**

விரிவுரைகளை நடாத்துவதற்கு நீர்த்துறையில் நிபுணத்துவம் பெற்ற விஞ்ஞானிகளினதும் மருத்துவர்களினதும் கமத்தொழில் துறையிலுள்ள நிபுணர்களினதும் உதவி பெறப்பட்டதுடன் கல்வி நெறியின் பொருளடக்கமானது நீருடன் சம்பந்தப்பட்ட பின்வரும் துறைகளையும் உள்ளடக்கியுள்ளது.

1. இலங்கையின் நீர் வளங்களினதும் (மேற்பரப்பு நீரும் நிலத்தடி நீரும் உள்ளடங்களாக) நீர்த்தரத்தினதும் அளவினதும் நீர் பரிசோதனையினதும் நீர்த்தரங்களினதும் அறிமுகப்படுத்துகை
2. நீரின் முகாமைத்துவம், பேணல் மற்றும் சுற்றாடல் தாக்கங்கள், நீர்ப்புவிச்சரிதவியல் அளவை முறைகள், நீர்மாசடைதல்.
3. நீர் சம்பந்தப்பட்ட நோய்களும் நோய்களைத் தடுப்பதற்குமான கல்விநெறிகள்
4. நீர் சுத்திகரித்தல் முறைகளும் வடிகட்டிகளின் அறிமுகப்படுத்தலும்.

**1.3 நீர் பற்றிய பயிற்சிப் போதனைகள்**

சுகாதார அதிகாரிகளினதும் கல்விநெறியில் பங்குபற்றுபவர்களினதும் தகவலின் அடிப்படையில் நாட்பட்ட சிறு நீரக நோயும் நீர் சம்பந்தப்பட்ட நோய்களும் நிலவுகின்ற பிரதேசங்களிலுள்ள கிராமிய மக்களுக்கு விழிப்புணர்வை ஏறபடுத்துவதன் பொருட்டு நீர் கிளினிக்கு நிகழ்ச்சித்திட்டங்கள்

ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் தொடக்க நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டதுடன் இவை ஆராய்ச்சி, பயிற்சி நிலைத்தினதும் அப்பிரதேசங்களின் அரசாங்க உத்தியோகத்தர்களினதும் (பிரதேசச் செயலாளர், மருத்துவ உத்தியோகத்தர்) பங்குபற்றுதலுடன் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இருபது (20) நீர் பயிற்சி சோதனைகள் 2011 சனவரியிலிருந்து திசெம்பர் வரையுள்ள காலப்பகுதியில் ஒழுங்குபடுத்தப்பட்டன.

நீர் பயிற்சிப் போதனையின் குறிக்கோள் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், விரிவுரைகள், கலந்துரையாடல்கள் மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்துதல், நீர் பரிசோதனை, புளோரைட் வடிகட்டிகளை அறிமுகப்படுத்துதல் மண்பானைகளை விநியோகித்தல் ஆகியன போன்ற நடவடிக்கைகள் மூலமாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகவிருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சேவைகள் பின்வருமாறு.

நடத்தப்பட்ட நீர்ப் பயிற்சிப் போதனைகளின் எண்ணக்கை – 20

பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை – 2846

பரிசோதனை செய்யப்பட்ட நீர் மாதிரிகளின் எண்ணிக்கை – 2077

விநியோகிக்கப்பட்ட வடிகட்டிகளின் எண்ணிக்கை – 248

விநியோகிக்கப்பட்ட மண் பானைகளின் எண்ணிக்கை –298



**நீர்ப்போதனை வகுப்பு நிகழ்ச்சித்திட்டம்**

## 11. வடமேல் மாகாணம்

வடமேல் மாகாணத்திலுள்ள மக்களினதும் இம் மாகாணத்தின் அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களினதும் மக்களின் வீட்டு, கமத்தொழில் மற்றும் கைத்தொழில் நீர்த் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதன் பொருட்டு மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

நீர் புவிச்சரிதவியல் விசாரணைகள் -53

கைப்பம்பு பொருத்தப்பட்ட குழாய்க் கிணறுகளின் நிருமாணம் - 43

பம்புப் பரிசோதனை – 19

குழாய்க் கிணறு சுத்தப்படுத்தல் - 01

நீர் மாதிரி பரிசோதனை – 244

மொத்த சம்பாத்தியம் 22 மில்லியன் ரூபாவாகவிருந்தது.

2011ஆம் ஆண்டில் புத்தளம் மாகாண அலுவலகத்தினால் நடாத்தப்பட்ட நிலத்தடி நீர் மதிப்பீடு, விசாரணை மற்றும் அபிவிருத்தி ஆகியன பற்றிய விவரங்கள் பின்வருமாறு.

1. அரசாங்க நிறுவனங்களினால் கிராமிய பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட நீர் வழங்கல் திட்டங்களை அபிவிருத்தி செய்வதன் பொருட்டு தங்கவெல, வல்பலுவ, பட்டுளு ஓயா, ஆராச்சிக்கட்டு, புத்தளம் பிரதேச செயலக இடப்பரப்புகளில் நீர் புவிச்சரிதவியல் அளவைகளையும் குழாய்க் கிணறு தோண்டுதல், பம்பு பரிசோதனை, கைப்பம்புகளைப் பொருத்துதல் ஆகிய பணிகளைச் செய்தல் (வருமானம் 1,661,214.00 ரூபாவாகும்)

2. மகாகும்புக்கடவல, புத்தளம், வனாத்தவில்லுவ, மண்டலம் பிரதேசங்களில் கமத்தொழிலுக்கு நீர் பற்றுக்கொள்ளுவதன் பொருட்டு நீர்ப்புவிச்சரித அளவைகள், குழாய்க் கிணறு தோண்டுதல், பம்பு பரிசோதனை ஆகியவற்றைச் செய்தல். (வருமானம் 2,364,902.40 ரூபாவாகவிருந்தது)

3. வோ்ல்ட் விசனின் உதவியுடன் வனாத்தவில்லுவ, கல்பிட்டியா பிரதசங்களில் உள்ள கிராமிய மக்களின் குடிநீரின் தரத்தை சரிபார்ப்பதன் பொருட்டு அப்பிரதேசங்களில் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. இந்த நீர் மாதிரிகள் இரசாயன ரீதியாக பரிசோதனை செய்யப்பட்டு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டது. (வருமானம் 701,120.00)

4. வரையறுக்கப்பட்ட ஹோலிசிம லங்கா பிரைவேட் தாபனம் நீர் மட்டத்திற்கு கீழே சுண்ணாம்புப் பாறைப் படுகையின் அகழ்வு வேலையை விசாரிப்பதற்கு விரும்புகின்றதன் நிமித்தம் நீர் புவிச்சரிதவியல் அளவைகளையும் குழாய்க் கிணறு தோண்டுதலையும் 72 மணித்தியாலய பம்புப் பரிசோதனைகளையும் நீர் மாதிரிகளின் இரசாயன ரீதியான பரிசோதனைகளையும் செய்ததன் பின்னர் சாத்தியத்தகவு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டது. (வருமானம் 9,510,951.56)

5. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவியுடன் மன்னார் மாவட்டத்திலுள்ள மீள்குடியமர்த்தல் சமூகத்தின் குடி நீர்த் தேவைப்பாடுகளையும் ஏனைய நீர்த் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்வதன் பொருட்டு கைப்பம்பு பொருத்தப்பட்ட குழாய்க் கிணறு நிருமாணக் கருத்திட்டம் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

6. மன்னார் பண்டாரவெளியில் நீர் போத்தலில் அடைத்தல் கருத்திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பில்நீர்ப் புவிச்சரிதவியல் அளவைகள் நடாத்தப்பட்டு இயைபுள்ள சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.(வருமானம் 124,656.00) ரூபாவாகவிருந்தது.

7. நாத்தாண்டியாவில் இளைஞர் சிறப்பணி நிலையமொன்றில் ஓர் வெட்டு கிணறுக்கான அமைவிடமொன்றைத் தெரிவு செய்வதற்காக நீர் புவிச்சரிதவியல் அளவையொன்று நடாத்தப்பட்டது. ஏற்கனவே உள்ள குழாய்க் கிணறு ஒன்றும் சுத்திகரிக்கப்பட்டது. (வருமானம் 85,680.00 ரூபாவாகவிருந்தது)

8. புத்தளம் பிரதேசத்தில் குழாயக் கிணற்று நீரானது நீர் வழங்கலுக்காக பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றதுடன் நிலத்தடி நீர் எடுக்கப்படும் அளவுகள் துரிதமாக அதிகரிக்கப்பட்டுள்ளன. அளவுக்கு மீறிய பம்புதல் காரணமாக கடல் நீரானது ஆழமான நீர் தாங்கு படுக்கை முறைமைக்குள் புகுத்தப்படலாம். அணுசக்தி அதிகார சபையின் உதவியுடன் சமதானிகளைப் பயன்படுத்தி இந்த நிலைமை கட்டுப்படுத்தப்பட்டதுடன் ஆழமான நீர் தாங்கு படுக்கை முறைமைக்குள் கடல் நீர் உட்புகுதல் எதுவும் இல்லை எனக் காணப்பட்டுள்ளது. (வருமானம் 594,033.74 ரூபாவாகவிருந்தது).

9. வடமேல் மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும் கைத்தொழில்கள் மற்றும் கருத்திட்டங்களுக்குத் தேவைப்படும் சுற்றாடல் அறிக்கைகள் மீது சிபாரிசுகளை வழங்குவதன் பொருட்டு நீர் புவிச்சரிதவியல் அளவைகளையும் பம்பு பரிசோதனையையும் நீர் மாதிரி பரிசீலனைகளையும் நிறைவேற்றுதல். இந்த வகுதியின் கீழ் வீதி அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் பாறைப்பார்க்குழிகளிலுள்ள நீரை அகற்றுதலும் சலவைச்சாலைகளிலுள்ள நீரை அகற்றுவதற்கும் கைத்தொழில்களுடன் தொடர்புடைய நீரை பிழிந்தெடுத்தலும் கட்டுப்படுத்தப்பட்டு இயைபுள்ள அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. (வருமானம் 56,560.00 ரூபாவாகவிருந்தது)

10. அணை பாதுகாப்பு, நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டத்தின் கீழ் கற்பிட்டி, புத்தளம், வனாத்தவில்லுவ பிரதேசச் செயலாளர் பிரிவுகள் நீர்ப்புவிச்சரித அளவைகளை மேற்கொள்வதற்கு தெரிவு செய்யப்பட்டன. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குழாய்க் கிணறுகள் தரவு சேகரித்தலும் நீர்த்தர மாற்றங்களைக் கண்டறிவதற்கான கண்காணித்தல் வலையமைப்பின் நிறுவுகையும் நீர் மாதிரிகளின் பரிசோதனையும் நீர்த்தரப் படங்களின்

தயாரித்தலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. நீர் தாங்கு படுக்கை குணவியல்புகளைக் கண்டறிவதன் பொருட்டு வனாத்தவில்லு பிரதேசத்தில் ஓர் குழாய்க் கிணறு நிருமாணிக்கப்பட்டுள்ளது. (வருமானம் 161,414.01 ரூபாவாகவிருந்தது)

11. அணை பாதுகாப்பு, நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டத்தின் கீழ் புத்தளம் பரிசோதனைக் கூடம் முழுமையான பரிசோதனைக் கூடமாக மாற்றப்பட்டது. இது இப் பிரதேசத்திலுள்ள மக்கள் அவர்களுடைய குடி நீர் மாதிரிகளை பரிசோதனை செய்விக்க முடியுமென்பதனால்அவர்களுக்கு மிகவும் பிரயோசனமானதாகவுள்ளது. இது இச் சபையின் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கும் கூட வசதியளிக்கும்.

12. கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி நிறுவகத்திற்குச் சொந்தமான வனாத்தவில்லு பண்ணையில் ஓர் குழாய்க் கிணற்றுக்குப் பொருத்தமான அமைவிடமொன்றை கண்டுபிடிப்பதற்காகநீர்புவிச்சரிதவியல் ஆய்வொன்றைச் செய்தல் (வருமானம் ரூபா 40,320.00)

13. புதிய குடி மனைகளின் நிருமாண வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**தென் மாகாணம்**

அம்பாந்தோட்டையில் அமைந்துள்ள தென் மாகாண சபையின் அலுவலகத்தில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. பம்பு பரிசோதனையைச் செய்து தங்காலை மீன்பிடி துறைமுகத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல்
2. நீர் புவிச்சரிதவியல் அளவையைச் செய்து அறிக்கையை திஸ்ஸமஹாராம லேக்சைட் உல்லாசப் பிரயாண விடுதிக்கு சமர்ப்பித்தல்.
3. அம்பாந்தோட்டை அணு சக்தி அதிகார சபைக்காக ஓர் குழாய்க் கிணறை நிருமாணித்தல்.
4. அந்துன்கொட, திக்கும்புறவில் திரு.ஜே.ஈ.டி.ஜீவானந்தாவிற்குச் சொந்தமான காணியின் நிலத்தடி நீர் வளங்கள் மீதான தாக்க மதிப்பீட்டு அறிக்கையை சமர்ப்பித்தல்.
5. கபராகல 153 சியிலுள்ள திரு.பீ.எம்.கே.சுமணரத்தினவிற்குச் சொந்தமான பாறைக்கற்குழியின் நிலத்தடி நீர் வளங்கள் மீதான தாக்க மதிப்பீட்டு அறிக்கையைச் சமர்ப்பித்தல்
6. முதியங்கன கோவிலில் நீர் வழங்கல், ஓர் உற்பத்திக் கிணறு மூலமாக வழங்கப்பட்டது.

## 13. ஊவா மாகாணம்.

1. மொனராகலை மாவட்டத்தில் நிலவிய வரட்சியை எதிர்நோக்குவதற்காக குழாய்க் கிணறுகள் நிருமாணிக்கப்பட்டதுடன் உற்பத்திக் கிணறுகளுக்கு பம்புகள் பொருத்தப்பட்டன. மொனராகலை மருத்துவசாலை கடுமையான நீர்பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளதுடன் மருத்துவசாலையின் மனையிடத்திலுள்ள குழாய்க் கிணற்றிலிருந்து நீர் வழங்கியதன் மூலம் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இச் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நீரின் தரத்தை மேம்படுத்துவதற்காக இச்சபை வடிகட்டியொன்றை வடிவமைத்து நிறுவியுள்ளது.
2. ஊவா மாகாண சபையினால் வழங்கப்பட்ட நிதியங்களுள் தமிழ் பாடசாலைக்கும் பண்டாரவளையிலுள்ள தச்சு வேலைக்களத்திற்கும் நெல்லியத்த கிராமத்திற்குமாகக் குழாய்க் கிணறுகள் நிருமாணிக்கப்பட்டன. தச்சு வேலைக் களத்திலுள்ள கிணற்றின் மீது பம்பு பரிசோதனையொன்று நடாத்தப்பட்டது. (வருமானம் 1,650,890.00 ரூபாவாகவிருந்தது).
3. 2011 பெப்ரவரி 04ஆந் திகதியன்று ஆரம்பிக்கப்பட்ட தெயட்ட கிருள நிகழ்ச்சித்திட்டத்தில் இச் சபை தீவிரமாகப் பங்குபற்றியுள்ளது.
4. நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சராகிய மாண்புமிகு நிமல் சிறிபால த சில்வாவின் தலையீட்டுடன் பதுளை மாவட்டத்தின் குடிநீர்த் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக அணை பாதுகாப்பு, நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டத்தின் கீழ் 100 குழாய்க் கிணறுகள் நிருமாணிக்கப்பட்டன. 63 அமைவிடங்களின் நீர்ப் புவிச்சரித அளவைகள் செய்யப்பட்டதுடன் குழாய்க் கிணறுகள் நிருமாணிக்கப்படுவதற்காக 53 அமைவிடங்கள் தெரிவு செய்யப்பட்டன. இதுவரை 13 கிணறுகள் நிருமாணிக்கப்பட்டு அவற்றிற்கு கைபம்புகள் பொருத்தப்பட்டுள்ளன. இப்பிரதேசத்தின் நீரின் தரத்தினை ஆய்வு செய்வதற்காக இந்த கிணறு வலையமைப்பு பயன்படுத்தப்படுகின்றது. மஹியங்கனை தேர்தல் தொகுதியில்

நிருமாணிக்கப்பட்ட கிணறுகள் அமைச்சரினால் வைபவ ரீதியாக திறக்கப்பட்டதுடன் இந்த நடவடிக்கைகள் இச்சபையின் தொழிற்படு பணிப்பாளராகிய கலாநிதி சிசிர கோதாகொடவினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. ரிதிமாலியத்த பிரதேச செயலகத்திற்கு நிரந்தர நீர் வழங்கலைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

5. மேற்போந்தவற்றுடன் கூடுதலாக மொனராகலை பிரதேசத்தின் நிறுவனங்களினதும் தனிப்பட்டவர்களினதும் கோரிக்கையின் பேரில் மொனராகலை அலுவலகத்துடன் தொடர்புடைய பின்வரும் முயற்சிக்கும் பொறுப்பேற்கப்பட்டன.

(i) மீப்பிலிமன்னவிலும் அம்போவலவிலும் உள்ள ஜாக்ரோ பண்ணையிலும் ஸ்குறோபெரி பண்ணைகளிலும் நீர் புவிச்சரித அளவைகளைச் செய்ததன் பின்னர் பொருத்தமான நீர் வளங்களைச் சுட்டிக் காண்பிக்கின்ற அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

(ii) தனமல்விலவிலுள்ள இயலாமையையுற்ற நிலையிலுள்ள பிள்ளைகளுக்கான மெத்செவன இல்லத்திற்கு வெட்டு கிணறு ஒன்றுக்கான நீர் புவிச்சரிதவியல் அளவையைச் செய்தலும் நிருமாணித்தலும்.

(iii) மொனராகலை, வெள்ளாச்சிக்கடையில் குழாய்க் கிணறு ஒன்றை அமைப்பதன் பொருட்டு நீர் புவிச்சரிதவியல் அளவையைச் செய்தல்.

## 14. அணை பாதுகாப்பு, நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டம்

இக் கருத்திட்டத்தின் கீழ் இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட 30 பிரதேச செயலாளர் பிரிவுகளில் கண்காணித்தல் வலையமைப்பு நிறுவப்படும்.

### 1. இக்கருத்திட்டத்தின் நோக்கம்

நிலத்தடி நீர் வலையமைப்பு இல்லாததன் நிமித்தம் நீர் புவிச்சரிதவியல் நோக்கில் நீர்தாங்கு படுக்கைகள் மீது வலிந்து செயற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்கங்கள் கண்டறியப்படவில்லை. இலங்கையில் நீர் வளங்கள் சபையே நிலத்தடி நீரின் பயன்படுத்துகை மற்றும் குழாய்க் கிணறுகளின் நிருமாணம் ஆகியவற்றின் திட்டமிடலையும் எடுத்தலையும் மேற்பார்வை செய்தலையும் பிரதானமாகக் கையாளுவதற்கான முகவர் நிலையமாகும்.

### 2. பின்னணி

இக் கருத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் நிலத்தடி நீரிலுள்ள மாற்றங்கள் மீது ஆய்வொன்று தர ரீதியாகவும் அளவு ரீதியாகவும் மேற்கொள்ளப்படும்

**நடைமுறை விடயங்கள்**

- நீரின் தரப் பிரச்சினைகள்
- கடல் நீரின் உட்புகுகை
- நீர் வங்கலுக்கும் கைத்தொழில்களுக்குமாக நிலத்தடி நீரின் கட்டுப்பாடற்ற எடுத்தல்
- கைத்தொழில்களில் இருந்தும் கமத்தொழில் நடவடிக்கைகளில் இருந்தும் பிறவழிவகைகளிலிருந்தும் வெளியேற்றப்படும் கழிவுநீரினால் நிலத்தடி நீர் மாசடைதல்.
- நிலத்தடி நீரின் மீது தகுந்த மேற்பார்வையும் கண்காணித்தலும் இல்லாதமை

**இக் கருத்திட்டத்தின் கீழ்**

- நீர் வளங்கள் சபையினால் கண்டறியப்பட்ட இடர்ப் பிரதேசங்கள் மீதான ஆய்வு
- தெரிவு செய்யப்பட்ட (06) பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் நீர் புவிச்சரிதவியல் தரவுகளின் சேகரிப்பு

- நீரின் தரத்தைப் பரிசோதனை செய்வதுடன் சேர்த்து ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகாலப் பகுதிக்கேனும் முன்னோடிப் பிரதேசங்களில் நிலத்தடி நீரை தர ரீதியாகவும் அளவு ரீதியாகவும் கண்காணித்தல்

**முன்னோடிப் பிரதேசங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.**

| முன்னோடிப் பிரதேசம் | விடயங்கள் | பிரதேசச் செயலாளர் பிரிவுகள் | மாவட்டமும் பிரதேசமும் (கி.மீ) |
|---|---|---|---|
| பிரதேசம் 1(A1) | பற்றீரியா மாசடைதலும் விசாலமான கமத்தொழில் மாசடைதலும் | யாழ்ப்பாண நகரம், நல்லூர், சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி | யாழ்ப்பாணக் குடாநாடு 418 |
| பிரதேசம் 2(A2) | விசாலமான கமத்தொழில் | கற்பிட்டி | புத்தளம் 168 |
| பிரதேசம் 3(A3) | நிலத்தடி நீரை அளவுக்கு அதிகமாக எடுத்தல் | தம்புள்ள, கலேவெல, லக்கல்ல, பல்லேகம, நாவுல, பல்லேபொல | மாத்தளை 1200 |
| பிரதேசம் 4(A4) | சிறுநீரக நோய் | மதவாச்சி, நுவரகம பலாத்த (மத்தி), பதவியா, கெபெத்திகொல்லாவ, ரம்பாவேவ, ஹொரவப்பொத்தானை, ககட்டகஸ்திரேலியா, கலன்பிந்துவேவ | அநுராதபுரம் 1990 |
| பிரதேசம் 5(A5) | கைத்தொழில் மாசடைதல் | கம்பஹா, ஜா –எல, வத்தளை, பியகம, கட்டானை | கம்பஹா 376 |
| பிரதேசம் 6(A6) | சவர்த்தன்மை | புத்தளம், வனாத்தவில்லு | புத்தளம் 1012 |
| பிரதேசம் 7(A7) | விசாலமான கைத்தொழில் | சம்மாந்துறை, கல்முனை, நிந்தவூர், அட்டாளைச்சேனை | அம்பாறை 343 |
| பிரதேசம் 8 | நீரின் தரமும் அளவும் | மாவட்டம் முழுவதும் | பதுளை |



1 The pilot areas identified under DSWRPP
N
2 Legend
Pilot areas
3
4 NALLUR
5 CHAVAKACHCHERI
6 JAFFNA
7 PACHCHILAIPALLAI
8 PADAW IYA
9 KEBITIGOLLEWA
10 MEDAWACHCHIYA
11 HOROWUPOTANA
12 RAMBEWA
13 NUWARAGAMPALATA CENTRAL
KAHATAGASDIGILIYA 14
15 VANATHAVILLU
GALENBINDUNUWEWA 16
17 North Central Province
18 KALPITIYA
PUTTALAM 19
NAULA 20
A1
21 North Western Province
GALEWELA
DAMBULLA 22
23 PALLEPOLA
24 LAGGALA PALLEGAMA 24B
25 Central Province
26 KALMUNAI
27 SAMMANTHURAI
NINTAVUR 28
ADDALACHCHENAI
29
KATANA 30
GAMPAHA 31
32 JA-ELA
WATTALA BIYAGAMA 33
34 Province of Uva
35 Western Province
36 Province of Sabaragamuwa
37 Southern Province
0 11,500 23,000 46,000 69,000 92,000
Meters
39 Hydrogeology Division / WRB/RRGR

**இலங்கையின் வரைபடம்**

1. **அணை பாதுகாப்பு, நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டத்தின் கீழ் கண்டறியப்பட்ட முன்னோடிப் பிரதேசங்கள்**
2. **வாசகம்**
3. முன்னோடி பிரதேசங்கள்
4. நல்லூர்
5. சாவகச்சேரி
6. யாழ்ப்பாணம்
7. பச்சிலைப்பள்ளி
8. பதவியா
9. கெபெத்திக்கொல்லாவ
10. மதவாச்சி
11. ஹொரவப்பொத்தானை
12. றம்பேவா
13. நுவரகம்பலாத்த மத்தி
14. ககட்டகஸ்திரேலியா
15. வனாத்தவில்லு
16. கலென்பிந்துவேவ
17. வடமத்திய மாகாணம்
18. கல்பிட்டி
19. புத்தளம்
20. நாவுல
21. வடமேல் மாகாணம்
22. தம்புள்ள
23. பள்ளேபொல

24.(a) லக்கல

24.(b) பள்ளேகம

25. மத்திய மாகாணம்
26. கல்முனை
27. சம்மாந்துறை
28. நிந்தவூர்
29. அட்டாளைச்சேனை
30. கட்டான
31. கம்பஹா
32. ஜா-எல
33. பியகம
34. ஊவா மாகாணம்
35. மேல் மாகாணம்
36. சம்பிரகமுவ மாகாணம்
37. தென் மாகாணம்
39. நீர் புவிச்சரிதவியல் பிரிவு

**(அ) வேலைக் களங்களும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும்**



யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீர் கையாளுகை மீதான விழிப்புணர்வு



யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தல்

**(ஆ) 2011ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகள்**



தள நிலையத்தை நிறுவுதல்



டிஜிபிஎஸ் பொருத்துகை



தளத்தில் அளவீடு

2.) **வெளிக்களப் பரிசோதனை உடையில் இரசாயன சுற்றெல்லைகளை அதே இடத்திலேயே தீர்மானித்தல் (F,NO,SO4,CI, சவர்த்தன்மை,TDS முதலியன)**



நிலத்தடி நீரில் புளோரைட்டை அளவிடுதல்



நிலத்தடி நீரில் **NO3** இன் வெளிக்கள அளவீடு

3.) **உயர்முனை AGI புவிப் பௌதிக உபகரணங்கள் முறைமையின் பயனபடுத்தலுடன் ERT தொழில் நுணுக்க முறையினால் உபமேற்பரப்பு நிலத்தடி நீருக்கான 2-D படிவமாக்குதல்**



புவிப் பௌதிக அளவை செய்வதற்காக நிறுவப்பட்டுள்ள **AGI** உபகரணம்



வெளிக்களத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் **ERT** ஒழுங்கு நடவடிக்கை



இணை மையத்துடன் **ERT** கருவி




உபகரணத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிலைமாற்று அலகு




2-**D** படிமவாக்குதலில் (நில படிமவாக்குதல்) மென் பொருளில் பச்சைத்தரவு முறை வழியாக்கம் செய்ததன் பின்னர் 2-**D** கட்புலப்படுத்தல்

### 3. முன்னோடிப் பிரதேசங்களின் நீர் தாங்கு படுக்கைகளிலுள்ள நிலத்தடி நீரை தர ரீதியாகவும் அளவு ரீதியாகவும் கண்காணிப்பதன் பொருட்டு பரிசோதனைக் கிணறுகளை நிருமாணித்தல்



**பியகமவில் பரிசோதனைக் கிணற்றின் நிருமாணிப்பு**

### 5. நீர் வளங்கள் சபையிலுள்ள நிலத்தடி நீர் தரவுத் தளத்தின் மீளமைப்பு

- புதிதாக மீளமைக்கப்பட்ட பல் ஊடகச் செய்திகள் தெரிவு பெறுவழி அட்டவணைகளுடன் சம்பந்தப்பட்ட நிலத்தடி நீர் தரவுகள் கணனிப் பிரிவினால் எக்செல் (Excel) தாள்களில் தயாரிக்கப்பட்டன.
- தரவுத்தளத்தின் மீளமைப்பு றிரெண்ட் ரெக் பிவிரி லிமிடெட் நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டு நீர் வளங்கள் சபைக்கு வழங்கப்பட்டன.




**A** - நிலத்தடி நீர் தகவல் முறைமைக்கான இடம்சார் தரவுகளும் இடம் சாராத தரவுகளும்

**B** - நீர்த் தரத்தின் தரவு

**C** - தரவுத் தளம்

**D** - இடம் சாராத தரவு

**E** - கிணற்றின் தகவல் தரவு

**F** - ஜிடிபி

**G** - உருவாக்க மேற்பகுதி

**H** - வேகச் செலுத்துகை

**I** - நில இணைப்புகளுடனான படம்

**முன்னோடிப் பிரதேசங்களில் பூர்த்தி செய்யப்பட்ட வேலைத்தொகுதி**

- நீர் நுகர்வோர்களுக்கும் இயைபுள்ள தரப்பினர்களுக்குமாக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- ஏற்கனவே உள்ள தரவுகளினதும் தகவல்களினதும் பரிசீலனை
- தளப்படங்களை தயாரித்தல்
- நிலத்தடி நீர் கண்காணித்தல் வலையமைப்பை நிறுவுவதற்காக ஆழமற்ற நீர் தாங்கு படுக்கைகளிலும் ஆழமான நீர் தாங்கு படுக்கைகளிலும் அமைவிடங்களை கண்டறிதல்.
- நிலத்தடி நீரின் நீரோட்டத் திசையைக் கண்டறிவதற்காக நிலத்தடி நீர் மட்டங்களைக் கண்காணித்தல்
- இரசாயன பரிசோதனையைச் செய்தல்

## 15. இரசாயன பரிசோதனை

பல்வேறு கருத்திட்டங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட நீர் மாதிரிகள் நீர் வளங்கள் சபையின் பரிசோதனைக் கூடத்தில் பரிசோதனை செய்யப்பட்டன. மீளாய்வாண்டில் எழுநூற்றிப் பத்தொன்பது (719) மாதிரிகள் இரசாயன ரீதியாகவும் முப்பத்திரண்டு (32) மாதிரிகள் பற்றீரியா ரீதியாகவும் பரிசோதனை செய்யப்பட்டன. இரண்டாயிரத்தி எண்ணூற்றி எண்பத்தேழு (2887) மாதிரிகள் கனரக உலோகங்களுக்காகப் பரிசோதனை செய்யப்பட்டன.

பரிசோதனை செய்யும் திறனை மேம்படுத்துவதன் பொருட்டு அணை பாதுகாப்பு, நீர்வளங்கள் திட்டமிடல் கருத்திட்டத்தின் கீழ் 6.6 மில்லியன் ரூபா பெறுமதியுடைய அதி நவீன விஞ்ஞான உபகரணங்களும் இரசாயனப் பொருட்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாகாண அலுவலகத்தில் பரிசோதனைக் கூடமொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 16. துளையிடல் பிரிவு

மீளாய்வாண்டில் நூற்றி ஐம்பத்திரண்டு (152) குழாய்க் கிணறுகள் நிருமாணிக்கப்பட்டதுடன் முப்பத்தேழு (37) கிணறுகள் சுத்தப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் ஐந்து (05) கிணறுகள் கைப்பம்புகள் பொருத்தப்பட்டும் உள்ளன.

**நிருமாண வேலை**

2011ஆம் ஆண்டில் பின்வரும் நிருமாண வேலை நிறைவேற்றப்பட்டுள்ளது.

### 17.1 தலைமை அலுவலகம்

01. கட்டடங்களின் முகடு நிருமாணிக்கப்பட்டுள்ளது
02. கராஜ் நிருமாணிக்கப்பட்டுள்ளது.

### 17.2 வேலைக்களம், இரத்மலானை

01. மின்சாரத் தொகுதியின் பழுதுபார்த்தல் வேலையும் கட்டடங்களின் பராமரிப்பும் மேற்கொள்ளப்பட்டன.
02. பாதுகாப்பு குடிசை நிருமாணிக்கப்பட்டது.

### 17.3 மாகாண அலுவலகம், மொனராகலை

01. கூரையினதும் முகட்டினதும் பழுதுபார்த்தல் வேலை செய்யப்பட்டது.

## 18. வேலைக்களம், இரத்மலானை

### 18.1 வாகனங்களின் சிறிய பழுதுபார்த்தல் வேலைகள்

இச் சபையின் வாகனங்களின் சிறிய பழுது பார்த்தல் வேலைகள் இரத்மலானை வேலைக்களத்தில் செய்யப்பட்டன. உலொறிகளின் மீது 3 பழுதுபார்த்தல் வேலைகளும் சிறிய மோட்டார் வண்டிகளின் பதினொரு (11) பழுதுபார்த்தல் வேலைகளும் மோட்டார் கார்களின் எட்டு (08) பழுதுபார்த்தல் வேலைகளும் ஜீப்புகளின் ஆறு (06) பழுதுபார்த்தல் வேலைகளும் துளையிடும் இயந்திரங்களின் நான்கு (04) பழுதுபார்த்தல் வேலைகளுமாக மொத்தமாக நாற்பத்திரண்டு (42) சிறிய பழுதுபார்த்தல் வேலைகள் செய்யப்பட்டன. ஒரு (01) ஜீப்பினதும் மூன்று (03) உலொறிகளினதும் அடிச்சட்டக வேலையும் ஒட்டு வேலையும் வர்ணம் பூசும் வேலையும் பூர்த்தி செய்யப்பட்டன.

### 18.2 துளையிடும் இயந்திரங்கள் பழுதுபார்த்தல் பிரிவு

துளையிடும் இயந்திரங்கள் பழுதுபார்த்தல் பிரிவினால் நீர் வளங்கள் சபையின் துளையிடும் இயந்திரங்களின் பழுதுபார்த்தலும் பராமரிப்பும் செய்யப்பட்டன. கடந்த ஆண்டில் இப்பிரிவினால் சகல துளையிடும் கருவிகளும் காற்று அமுக்கக் கருவிகளும் பழுது பார்க்கப்பட்டுள்ளன. துளையிடும் கருவிகளின் பதினொரு (11) பழுதுபார்த்தல்களும் காற்று அமுக்கக் கருவிகளின் மூன்று (03) பழுதுபார்த்தல்களும் செய்யப்பட்டன.

## 18.3 பொறிமுறை வேலைக்களம்

2011ஆம் ஆண்டில் இரண்டு காற்று ஆலைகள் பழுதுபார்க்கப்பட்டதுடன் தலைமை அலுவலகத்தில் கராஜின் நிருமாண வேலையும் அத்துடன் இருபத்தி நான்கு பேழைகளுக்கு வர்ணம் பூசும் வேலையும் பூர்த்தி செய்யப்பட்டன.

## 18.4 வாகனம் சுத்தப்படுத்தும் நிலையம்

இவ்வாண்டில் வாகனம் சுத்தப்படுத்தும் நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன் ஐம்பத்தி நான்கு வாகனங்கள் சுத்தப்படுத்தப்பட்டுள்ளன.

## 19. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

அரசாங்க கணக்காய்வு திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நான்கு (04) கணக்காய்வு விசாரணை வினாக்கள் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ஆறு (06) உள்ளகக் கணக்காய்வு வினாக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## 20. நிதி

சம்பந்தப்பட்ட ஆண்டிற்கான வருமானம் 81,172,412.00 ரூபாவாகவிருந்தது. 2011ஆம் ஆண்டிற்கு மீண்டுவரும் செலவினத்திற்கு 64,300,000.00 ரூபாவும் மூலதனச் செலவினத்திற்கு 10,855,506.00 ரூபாவும் திறைசேரியிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இவ்வாண்டிற்கு அறிவிக்கப்பட்ட பற்றாக்குறை 46,898,869.00 ரூபாவாகவிருந்தது.

இச் சபையின் சொத்துக்களை கையாளுவதற்காக முகாமைமென்கலம் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் சகல சொத்துகளும் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன.

## 21. நிருவாகம்

2011ஆம் ஆண்டில் நீர்வளங்கள் சபையின் பதவியினர்களின் மொத்த எண்ணிக்கை இருநூற்றி அறுபத்தி இரண்டாக (262) இருந்ததுடன் மூன்று நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிக் கொண்டிருந்தனர். ஏழு பணியாளர்கள் அமய அடிப்படையில் பணியாற்றிக் கொண்டிருந்தனர் சம்பந்தப்பட்ட ஆண்டில் பதின்நான்கு (14) பணியாளர்கள் நிரந்தர சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டனர். மூன்று (03) பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையிலும் ஆட்சேர்க்கப்பட்டனர். இவ்வாண்டில் ஆறு (06) பணயாளர்கள் பதவி விலகியுள்ளதுடன் நான்கு பணியாளர்கள் ஓய்வு பெற்றுள்ளனர்.

## 22. மனிதவள அபிவிருத்தி

இச் சபையின் உற்பத்தி வளத்தை மேம்படுத்துவதன் பொருட்டு பயிற்சி நெறிகளில் பங்குபற்றுமாறு பணியாளர்களுக்கு பணிப்பு விடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிறைவேற்று உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கி ஏழு பணியாளர்கள் குறுந்தவணை பயிற்சி நெறிகளில் பங்குபற்றுவதற்கும் ஆறு பணியாளர்கள் சான்றிதழ் வழங்கப்படும் நெறிகளில் பங்குபற்றுவதற்கும் பணிக்கப்பட்டனர். பதின்மூன்று (13) பணியாளர்கள் வேலைக்களங்களிலும் கருத்தரங்குகளிலும் பங்குபற்றுவதற்கும் ஒரு பணியாளர் வெளிநாட்டு புலமைப்பரிசில் நெறியில் பங்குபற்றுவதற்கும் பணிக்கப்பட்டனர்.

## 23. நலனோம்பல் வசதிகள்

சம்பந்தப்பட்ட ஆண்டில் நலனோம்பல், மரண நன்கொடைத் திட்டத்தின் கீழ் மரணத்தின்போதான போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கும் நலனோம்பல் வசதிகளை வழங்குவதற்குமாக இருநூற்றித் தொண்ணூற்றி நான்காயிரத்தி நூற்றி ஆறு ரூபா (294,106.00) வழங்கப்பட்டது. அத்துடன் இச்சபையின் பணியாளர்களினதும் அவர்களுடைய குடும்பங்களினதும் சுகாதார வசதிகளுக்காக செலவழிக்கப்பட்ட முன்னூற்றி எழுபத்தி நான்காயிரத்தி தொளாயிரத்தி அறுபத்தி நான்கு (374,965.00) ரூபாவைக் கொண்ட செலவுகளை மீள நிரப்புவதற்காக அத்தொகை இச் சபையினால் வழங்கப்பட்டது. பணிப்பாளர் சபையின் பணிப்பின் பிரகாரம் சபையின் பணியாளர்களுக்கு இந்

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளைக் காண்பிப்பதற்கும் இந் நாட்டின் அத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகளில் மாகாண அலுவலகங்களினால் வழங்கப்படும் பங்களிப்பை பற்றி அவர்கள் அறிந்து கொள்வதற்குமாக மூன்று நாள் கல்விச்சுற்றுலா ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது.

**24. போக்குவரத்து வாகனத்தொகுதி**

சம்பந்தப்பட்ட ஆண்டில் இச் சபையின் வாகனத் தொகுதி நாற்பத்தைந்து (45) வாகனங்களை வைத்திருந்தது. இவற்றில் (29) வாகனங்கள் ஓடக்கூடிய நிலையில் இருந்தன. அவை பிரதானமாக கெப்கள், கார்கள், ஜீப்புகள், உலொறிகள், டிராக்ரர்கள், கிரேன்கள் ஆகியனவாகவிருந்தன. 2011ஆம் ஆண்டில் அணை பாதுகாப்பு, நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டத்திலிருந்தும் இச் சபையின் சொந்த நிதியங்களிலிருந்தும் கொள்வனவு செய்யப்பட்ட மூன்று கெப்புகளையும் ஒரு முச்சக்கர வண்டியையும் இந்த வாகனத் தொகுதிக்கு சேர்க்கப்பட்டனவாகவிருந்தன.

**25. சுற்றுப் பயண வங்களா**

சுற்றுப் பயண வங்களா வைத்திருக்கப்படுவதன் நோக்கம் நீர் வளங்கள் சபையினதும் நீர்ப்பாசன, நீர் வளமுகாமைத்துவ அமைச்சினதும் உத்தியோகத்தர்களுடைய உத்தியோகபூர்வ சுற்றுலாக்களின் போதும் பொழுதுபோக்கு நேரத்தை செலவழிப்பதாக வருகை செய்யும்போதும் இடவசதியளிப்பதற்காகும். இத்துடன் கூடுலாக ஏனைய அரசாங்க உத்தயோகத்தர்களுக்கும் பொது மக்களுக்கும் இடவசதி வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**26. பௌத்த சங்கம்**

நீர்வளங்கள் சபையின் பௌத்த சங்கம் 1999 மே மாதம் 05ஆந் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2011ஆம் ஆண்டில் வெசாக் முழுநோன்மதி தினத்தை கொண்டாடுவதற்காக அலுவலக மனையிடத்தை அலங்கரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் இச் சபையில் சேவையாற்றியதன் பின்னர் மரணமடைந்த உறுப்பினர்களின் ஞாபகார்த்தத்தைக் கொண்டாடுவதற்காக பொசன் நோன்மதி தினத்தில் தர்ம சமய சொற்பொழிவு நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

**27. நன்றி நவிலல்**

இச் சபையானது நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சருக்கும் பிரதி நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சருக்கும் இதே அமைச்சின் செயலாளருக்கும் உத்தியோகத்தர்களுக்கும் பதவியினர்களுக்கும் பிற அரசாங்க திணைக்களங்கள், சபைகள், கூட்டுத்தாபனங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் உள்நாட்டு நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கும் ஆலோசனைகளுக்கும் அவர்களினால் வழங்கப்பட்ட உதவிக்கு நன்றி தெரிவிப்பதிலும் தனது பாராட்டை எழுத்தில் பதிவதிலும் மகிழ்ச்சியடைகின்றது. நீர் வளங்கள் சபையின் பணியாளர்களினால் வழங்கப்பட்ட சுறுசுறுப்பானதும் விசுவாசமானதுமான சேவை மிகவும் பாராட்டப்படுகின்றது.

பந்துல முனசிங்க
தலைவர்
நீர்வளங்கள் சபை
இல.2a, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை
கொழும்பு -07

2012.11.05

## வருமான அறிக்கை

2011 டிசம்பர் 31ஆம் திகதியன்று

| | குறிப்பு இணைப்பைப் பார்க்கவும்: | 2011 ரூபா | 2010 ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| நீரியல் பரிசோதனைகள் / நிலத்தடி நீர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி | 01 | 58,813,685 | 39,825,912 |
| நிலத்தடி நீர் தொடர் கவனிப்பு | 02 | 4,977,711 | - |
| நிலத்தடி நீர் அபிவிருத்தி | 03 | 14,574,730 | 19,803,509 |
| பிற மூலங்களிலிருந்தான வருமானம் | 04 | 2,806,286 | 2,040,653 |
| **உருவாக்கப்பட்ட செயற்பாடுகளிலிருந்தான வருமானம் (1)** | | 81,172,412 | 61,670,073 |
| **திறைசேரி உதவி கொடை - மூலதனம்** | | | |
| (ஆராச்சி கற்கைகள் - தொழிற்பாட்டு) (2) | 05 | 10,855,506 | 4,981,846 |
| **திறைசேறி உதவி கொடை (மீண்டெழும்)** (3) | | 64,300,000 | 65,000,000 |
| முழு வருமானம் - (1+2+3) | | 156,327,918 | 131,651,919 |
| **தொழிற்பாட்டுச் செலவுகள்** | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 6:1 | 92,600,961 | 80,103,010 |
| பிரயாணம் | 6:2 | 6,882,161 | 5,722,241 |
| நிரம்பல்களும் தேவைகளும் | 6:3 | 34,120,432 | 19,308,047 |
| ஒப்பந்த சேவைகள் | 6:4 | 3,751,269 | 3,185,262 |
| பராமரிப்பு | 6:5 | 6,686,573 | 5,706,877 |
| நலன்புரி வசதிகள் | 6:6 | 869,041 | 638,682 |
| பிற மீளெழும் செலவினங்கள் | 6:7 | 3,715,662 | 4,097,028 |
| திறைசேறி உதவி கொடை – (ஆராச்சி கற்கைகள் (தொழிற்பாட்டு) | 6:8 | 10,855,506 | - |
| பெறுமானத் தேய்வு | | 43,745,182 | 5,755,881 |
| **மொத்த தொழிற்பாட்டு செலவுகள்** | | 203,226,787 | 124,517,028 |
| **காலத்திற்கான தேறிய மேலதிகம் / (பற்றாக்குறை)** | | (46,898,869) | 7,134,891 |

# ஐந்தொகை

**2011 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான**

| | குறிப்புகள் | 2011 | 2010 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதன** | | | |
| ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 07 | 111,060,372 | 64,082,358 |
| நடைமுறையில் உள்ள வேலை (இயந்திரம் 2KR கருத்திட்டம்) | | 46,167,438 | 50,959,293 |
| | | **157,227,810** | **115,041,651** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புகள் | 08 | 29,338,542 | 16,904,483 |
| வியாபாரம் மற்றும் பிற வரவேண்டியவை | 09 | 13,748,394 | 14,355,660 |
| முன் கொடுப்பனவுகள் | 10 | 43,781 | 40,089 |
| காசு மற்றும் பிற காசு சமனானவை | 11 | 14,466,450 | 25,908,329 |
| | | 57,597,167 | 57,208,560 |
| **மொத்த சொத்துக்கள்** | | **214,824,977** | **172,250,211** |
| **உரிமை முதல் மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதன** | | | |
| பிற்போடப்பட்ட பொறுப்புக்கள் | 12 | 62,968,322 | 58,544,345 |
| செலுத்த வேண்டியவை | 13 | - | 240,000 |
| | | **62,968,322** | **58,784,345** |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| செலுத்த வேண்டியவை | 14 | 18,750,986 | 17,333,903 |
| அட்டுறுக்கப்பட்ட செலவுகள் | 15 | 6,565,238 | 4,519,612 |
| பிணை வைப்புகள் | 16 | 16,631 | 9,500 |
| | | **25,332,855** | **21,862,534** |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **88,301,177,** | **80,646,879** |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | |
| திரண்ட நிதி | 17 | 179,601,206 | 174,760,903 |
| அந்நிய உதவி | 17 | 206,542,220 | 129,824,942 |
| கழி: திரண்ட பற்றாக்குறை | 17 | (263,608,236) | (216,758,623) |
| மீள்பெறுமதிப்பிட்ட ஒதுக்கம் | 17 | 3,988,610 | 3,776,110 |
| மொத்த உரிமை முதல் | | **126,523,800** | **91,603,332** |
| மொத்த பொறுப்புக்களும் உரிமை முதலும் | | **214,824,977** | **172,250,211** |

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் 5 இல் இருந்து 15ஆம் பக்கம் வரையிலான குறிப்புகள் இந்நிதிக் கூற்றின் ஓர் ஒன்றிணைந்த பகுதியாகும். இந்நிதிக் கூற்றுகளைத் தயாரித்தும் சமர்ப்பித்தலும் பணிப்பாளர்களைச் சார்ந்ததாகும். சபையின் சார்பாக அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்படுகின்றது.

**பந்துல முணசிங்க**
**தலைவர்**

**கலாநிதி ஜி.எஸ்.ஏ.கோதகொட**
**தொழிற்பாடு பணிப்பாளர்**

**2012 ஓகஸ்ட் 30**
**நீர் வளங்கள் சபை**

குறிப்பு இல: 17

| | திரண்ட நிதி ரூபா. | வெளிநாட்டு உதவி ரூபா. | பிற மானியங்கள் ரூபா. | மீள்பெறுமதியிடல் சேமவைப்பு ரூபா. | திரண்ட இலாபம்/பற்றாக்குறை ரூபா. | மொத்தம் ரூபா. |
|---|---|---|---|---|---|---|
| 2010 ஜனவரி 1 இல் மிகுதி | 170,668,681 | 72,376,910 | 105,071,709 | 7,827,360 | (225,699,922) | 130,244,738 |
| வருடத்தில் பங்களிப்பு / சேர்வுகள் | 4,092,223 | - | 10,112,186 | - | - | 14,204,409 |
| நிதிச் செயற்பாட்டுக் கூற்றுகளில் | - | (34,754,899) | (22,980,964) | (4,051,250) | 1,806,407 | (59,980,706) |
| அடையாளம் காணப்படாத தேறிய இலாபங்களும்/நட்டங்களும் | | | | | | |
| நடப்பாண்டின் மேலதிகம்/ பற்றாக்குறை | - | - | - | - | 7,134,891 | 7,134,891 |
| 2010 டிசம்பர் 31 இல் மிகுதி | 174,760,904 | 37,622,011 | 92,202,931 | 3,776,110 | (216,758,623) | 91,603,332 |
| வருடத்தில் பங்களிப்பு / சேர்வுகள் | 4,890,000 | - | 76,717,278 | - | - | 81,607,278 |
| பதிவழிக்கப்பட்ட மூலதன சொத்துகள் | (49,698) | | | | | (49,698) |
| நிதிச் செயற்பாட்டுக் கூற்றுகளில் | - | - | - | 212,500 | 49,256 | 216,756 |
| அடையாளம் காணப்படாத தேறிய இலாபங்களும்/நட்டங்களும் | | | | | | |
| நடப்பாண்டின் மேலதிகம்/ பற்றாக்குறை | | | | | (46,898869) | (46,898869) |
| | **179,601,206** | **37,622,011** | **168,920,209** | **3,988,610** | **(263,608,236)** | **126,523,799** |

<u>வெளிநாட்டுதவி / அரச மான்யம்</u>

| | |
|---|---|
| JICA | 11,973,124 |
| ADB மற்றும் NWRA | 1,024,650 |
| பிற | 24,624,237 |
| **பிற மான்யங்கள்** | **37,622,011** |

| | 2010.12.31இல் பெறுமதி | வருடத்தில் அதிகரிப்பு | 2011.12.31இல் பெறுமதி |
|---|---|---|---|
| பயிற்சி நிலையம் - AW மற்றும் RS கருத்திட்டம் | 933,668 | 356,511 | 1,290,179 |
| ஜப்பானிய 2KR கருத்திட்டம் | 81,476,312 | | 81,476,312 |
| அமெராசியன் நிதியம் | 1,770,632 | | 1,770632 |
| DSWRPP நிதியம் | 8,022,319 | 75,427,306 | 83,449,625 |
| CN கருத்திட்டம் | | 933,461 | 933,461 |
| | **92,202,931** | **76,717,278** | **168,920,209** |

## காசோட்ட அறிக்கை
## 2011 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான

| | 2011 | | 2010 | |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| **செயலாற்றல் செயற்பாடுகளிலிருந்து காசோட்டம்** | | | | |
| வருட வட்டி வருமானத்தின் முன்னான இலாபம் | | (46,898,869) | | 7,134,891 |
| கூட்டு / கழி: முன்னைய வருட சீராக்கல் | 1,060,120 | 1,060,120 | 1,806,407 | 1,806,407 |
| | | 48,838,749 | | 8,941,298 |
| **கூட்டு:** பெறுமானத் தேய்வு | 43,745,182 | | 5,755,881 | |
| பணிக்கொடைக்கான முன்னேற்பாடு | 7,051,124 | 50,796,306 | 310,143 | 6,066,024 |
| தொழிற்படு மூலதனத்தில் மாற்றமடையுமுன்னான செயலாற்றல் தேறிய இலாபம் / (நட்டம்) | | **4.957,557** | | **15,007,322** |
| **தொழிற்படு மூலதன மாற்றங்கள்** | | | | |
| இருப்பில் (மேலதிகம்) / குறைவு | (12,434,059) | | (3,999,439) | |
| கடனாளிகள் (மேலதிகம்) / குறைவு | 607,265 | | 20,993,883 | |
| முன் கொடுப்பனவுகள் (மேலதிகம்) / குறைவு | (3,692) | | 40,220 | |
| கொடுப்பனவுகள் (மேலதிகம்) / குறைவு | 1,417,565 | | (984.639) | |
| அட்டுறுகள் (மேலதிகம்) / குறைவு | 1,812,756 | (8,600,165) | (1,208,351) | 14,841,674 |
| **செயலாற்றல் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசோட்டம்** | | **(3,642,608)** | | **29,848,996** |

| | | | | |
|---|---|---|---|---|
| <u>முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம்</u> | | | | |
| நிலையான சொத்துக்களின் கொள்வனவு | (10,062,122) | | (7,063,959) | |
| பணிக்கொடை கொடுப்பனவு | (2,627,146) | | (3,530,755) | |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசோட்டம்** | | **(12,689,268)** | | **(10,594,714)** |
| <u>நிதியீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம்</u> | | | | |
| அரசாங்க மானியம் | 4,890,000 | | 4,092,223 | |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசோட்டம்** | | **4,890,000** | | **4,092,922** |
| **வருடத்திற்கான தேறிய காசோட்டம்** | | **(11,441,878)** | | **23,346,505** |
| **வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசிற்கு சமனானவை** | | **25,908,329** | | **2,561,824** |
| **வருட இறுதியில் காசு மற்றும் காசிற்கு சமனானவை** | | **14,466,451** | | **25,908,329** |

**கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் பின்வருமாறு ;

1. **தயாரிப்பின் அடிப்படை**

கணக்கீட்டுக் கொள்கைகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் வரலாற்றுச் செலவின அடிப்படைக்கு முரணான வகையில் பிரயோகிக்கப்பட்டுள்ளது. வருமானமும் செலவினமும் அவற்றுடன் தொடர்பான நிதிக்கூற்று காலத்தில் உரப்பட்டிருப்பதுடன் பதிவாகியுள்ளது.

2. **ஆதனங்களும் அவற்றினது விலை மதிப்பீட்டு அடிப்படையும்**

2.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன குறைந்த திரட்டிய தேய்வுப் பெறுமதியாகச் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பனவற்றின் செலவினம் அதனுடன் ஒத்த ஏதேனும் நிகழ்வுச் செலவினங்களுடன் கூடியதாகும்.

**2.2 தேய்வுப் பெறுமானம்**

கொள்வனவு அல்லது சுழற்சி ஆண்டில் எவ்வித தேய்வும் வழங்கப்பட வில்லையென்பதுடன் முழு ஆண்டுக்குமான தேய்வு அதனை இல்லாதொழிக்கும் ஆண்டில் வழங்கப்படும்.

தேய்வுப்பெறுமதி நேரடி அடிப்படையில் நிலையாக சொத்துக்களின் செலவினத்திலிருந்து பதிவழிப்புச் செய்யும் வகையில் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த ஆதனங்கள் தொடர்பில் பயன்படுத்தக்கூடிய ஆதனங்களின் ஆயுட்காலம் எதிர்பார்க்கப்பட்டதாகும். இந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் வருடாந்த விகித கோட்பாடுகள் பின்வருமாறு.

| | |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 25மூ |
| உபகரணம், இயந்திரம், பொறித்தொகுதி | 25மூ |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 20மூ |
| விஞ்ஞான உபகரணங்கள் | 20மூ |
| நூலக புத்தகங்கள் | 20மூ |
| தளபாடம், இணைப்புகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கணனிகள் | 10மூ |
| தற்காலிக கட்டிடங்கள் | 33.33மூ |
| கட்டிட மேம்பாடுகள் | 33.33மூ |
| இயந்திரம் மற்றும் வாகன மேம்பாடுகள் | 33.33மூ |

வெளிநாட்டு உதவிகளின் நிதியளிக்கப்பட்ட தேய்வு ஏற்பாடொன்றாக செய்யப்பட்டுள்ளதுடன் குறிப்பீடு பிற்படுத்தப்பட்ட வருமானம் தொடர்புடைய மானிய கணக்கிலிருந்து பதிவழிப்புச் செய்யப்படும்.

3. **பொருட்பட்டியல்**

வாகன உதிரிப்பாகங்கள், களஞ்சியப் பொருட்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், எரிபொருள் மற்றும் பிற பாவனைப் பொருட்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக பொருட்பட்டியல் காணப்படுகின்றது. பொருட்பட்டியல்கள் FIFO அடிப்படையில் செலவினத்தை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்யப்படுகின்றது

## 4. பெறுகைகள்

4.1 செலவிடுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் பெறுகைகள் ஆரம்பிக்கப்பட்டன.

4.2 மோசமானதுடன் சந்தேகத்திற்குடமானதுமான கடன்கள்.

## 5. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

ஐந்தொகைத் திகதியிலுள்ளவாறு அறியப்பட்ட அனைத்து பொறுப்புக்களும் நிதியியற் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் சரியாக தீர்மானிக்க முடியாத தொகையுடைய தற்பொழுது அறியப்பட்ட பொறுப்புகளுக்கு போதிய ஏற்பாடுகள் காணப்பட்டன.

## 6. பிற்படுத்தப்பட்ட பொறுப்புகள்

6.1 இளைப்பாறுகை பணிக்கொடை 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்திற்காக நிலுவையிலுள்ள இளைப்பாறல் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அடிப்படைச் சம்பளத்தில் ஒன்றறை பங்கும் தொடர்ந்த ஒவ்வொரு வருட சேவைக்காகவும் நிதியாண்டின் இறுதி மாதத்தில் நியதிச்சட்ட கொடுப்பனவுகளுக்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விடயம் ஐந்தொகையில் பிற்படுத்தப்பட்ட பொறுப்புக்கள் என்பதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 7. வரி விதிப்பனவு

### 7.1 வருமான வரி

முன்னைய ஆண்டுகளிலும் குறித்த ஆண்டிலும் ஏற்பட்ட வரி இழப்புக்களை நோக்குகையில் நடைமுறை ஆண்டிற்கான வருமான வரிக்காக எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை.

### 7.2 பெறுமதி சேர் வரி

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகாரமளிக்கப் பட்டவாறு காசு அடிப்படையில் பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டுள்ளது.

நிதிக் கூற்றுக்கான குறிப்புகள்,

## வருமானம்

குறிப்பு.1

| | 2011 | 2010 |
|---|---|---|
| **நீர்ப் புவிச்சரிதவியல் விசாரணைகள் / ஆய்வுகள்** | ரூபா | ரூபா |
| நீர் புவிச்சரிதவியல் ஆய்வுகள் | 4,616,928 | 7,288,957 |
| குழாய்க் கிணறு நிர்மாணங்கள் | 43,155,836 | 27,843,612 |
| கை பம்புகள் நிறுவுதல் | 3,945,607 | 1,418,125 |
| நீர் இறைப்பு பரிசோதனைகள் | 2,737,943 | 1,692,600 |
| குழாய்க் கிணறுகள் சுத்திகரித்தல் | 2,521,993 | 1,085,292 |
| நீர் மாதிரி பகுப்பாய்வு | 1,835,378 | 497,325 |
| | **58,813,685** | **39,825,912** |

குறிப்பு: 2

**நிலத்தடி நீர் தொடர் கவனிப்பு**

| | | |
|---|---|---|
| அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டம் | 4,977,711 | - |
| மொத்த தொகை | **4,977,711** | **-** |

குறிப்பு :3

**நிலத்தடி நீர் அபிவிருத்தி**

| | | |
|---|---|---|
| நிலத்தடி நீர் அபிவிருத்தி (MANRIP - JICA) | 14,118,464 | 11,554,860 |
| காற்று ஆலைகள் | 110,440 | 360,112 |
| நிலத்தடி நீர் கருத்திட்டத்திற்கு செயற்கை மீள்செறிவூட்டல் | - | 60.3,095 |
| மொனராகலை கருத்திட்டம் | - | 1,204,95 |
| கிழக்கு மாகாணத்தில் கைப்பம்பு குழாய்க் கிணறுகள் | - | 3,365,400 |
| பொறிகளைச் சுத்திகரித்தலும் நீர் மாசுபடல் கட்டுப்பாடும் | 338,826 | 375,088 |
| வடக்கின் வசந்தம் - கிணறு தோண்டல் சுத்திகரிப்பு | - | 2,340,000 |
| ஜி.அயி.எஸ். வருமானம் | 7,000 | - |
| **மொத்த தொகை** | **14,574,730** | **19,803,509** |

குறிப்பு: 4

பிற வளங்கள் வருமானம்

| | | |
|---|---|---|
| தங்கு விடுதிகள் ஒதுக்கீடு | 105,155 | 98,471 |
| கடன்களின் மேலான வட்டியும் வங்கி வைப்புகளும் | 1,012,643 | 374,709 |
| குற்றப்பணமும் மேல் விதிப்புகளும் | 1,177,959 | 42,339 |
| கொரகஹவெவ தோட்ட வருமானம் | 964 | 14,256 |
| சில்லறை வருமானங்கள் | 330,767 | 147,663 |
| சூரிய திறன் கிடைக்கப்பெறாத கடன் கிடைப்பு | - | 1,363,215 |
| தேசத்திற்கு மகுடம் சூட்டல் | 178,798 | - |
| **மொத்த தொகை** | **2,806,286** | **2,040,653** |

குறிப்பு: 5

திறைசேரி மான்யம் - மூலதனம்
(ஆய்வு கற்கைகள் - செயற்பாட்டு)

| | | |
|---|---|---|
| விழிப்புணர்வு திட்டங்கள் நீர்ப் பகுப்பாய்வு (அநுராதபுரம்) | 1,993,500 | 4,763,746 |
| பதவி நிலையணியினர் பயிற்சி | 290,764 | 218,100 |
| கொழும்பு – நீர்கொழும்பு கரையோர புவிச்சரிதவியல் ஆய்வு | 7,366,539 | - |
| மண்படுக்கை அமைப்பில் நீர் தன்மை மாற்றங்களின் ஆய்வு – அநுராதபுரம் | 1,149,990 | - |
| புத்தளம் மண்படுக்கையில் ஓரகத் தனிம ஆய்வுகள் | 33,380 | - |
| பூகோள பட சேர்ப்புகள் | 21,333 | - |
| **மொத்தம்** | 10,855,506 | 4,981,846 |

| நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் - தொடர். | 2011 | 2010 |
|---|---|---|
| குறிப்பு இல: 6:1 | ரூபா | ரூபா |
| **ஆளுக்குரிய வேதனாதிகள்** | | |
| சம்பளங்களும் கூலிகளும் | 71,546,242 | 66,779,246 |
| மேலதிக நேரமும் விடுமுறைக் கொடுப்பனவும் | 6,259,291 | 5,543,821 |
| ஊழியர் சேமலாப நிதியம் -12% | 5,866,495 | 5,953,130 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் 3% | 1,466,573 | 1,488,120 |
| பணிப்பாளர்கள் கட்டணம் | 404,227 | 15,000 |
| பிற படிகள் | 32,750 | 13,550 |
| பணிக்கொடை | 7,025,383 | 310,143 |
| **மொத்த தொகை** | **92,600,961** | **80,103,010** |

குறிப்பு இல: 6:2
**பிரயாணச் செலவுகள்**

| | | |
|---|---|---|
| பிரயாணம் - உள்ளூர் | 6,882,161 | 5,662,714 |
| பிரயாணம் - வெளிநாடு | - | 59,527 |
| **மொத்த தொகை** | **6,882,161** | **5,722,241** |

குறிப்பு இல: 6:3
**நிரம்பல்களும் தேவைகளும்**

| | | |
|---|---|---|
| எரிபொருளும் உராய்வு நீக்கிகளும் | 14,454,648 | 10,110,528 |
| கழி: டிசம்பர் 31 இல் கையிருப்பு | (299,198) | (448,370) |
| **வருடத்திற்கான செலவினம்** | **14,155,450** | **9,662,158** |
| துளைபோடு செயற்பாடுகள் – நகர்வன | 34,347,815 | 17,379,015 |
| கழி: டிசம்பர் 31 இல் கையிருப்பு | (15,974,780) | (8,161,533) |
| **வருடத்திற்கான செலவினம்** | **18,373,035** | **9,217,482** |
| ஆய்வுகூட நகர்வனவும் பிறவும் | 3,099,978 | - |
| கழி: டிசம்பர் 31 இல் கையிருப்பு | (1,880,571) | - |
| **வருடத்திற்கான செலவினம்** | **1,219,407** | **324,332** |
| பிற நகர்வன | 372,540 | 104,076 |
| **மொத்த தொகை** | **34,120,432** | **19,308,047** |

குறிப்பு இல: 6:4
**ஒப்பந்த சேவைகள்**

| | | |
|---|---|---|
| தபால் மற்றும் தொடர்பாடல் | 959,797 | 863,546 |
| மின்சாரம் | 1,349,911 | 1,058,046 |
| வாடகை, இறைகள் மற்றும் இறைவரி | 666,451 | 396,949 |
| காப்புறுதி காசு செல்வழியில் | 11,169 | 2,799 |
| கணக்காய்வு கட்டணம் | 158,000 | 125,000 |
| அச்சிடுதலும் பிரசுரித்தலும் | 171,312 | 82,442 |
| செயலமர்வுகளும் கலந்துரையாடல்களும் | 18,150 | 237,031 |
| நீர் கட்டணங்கள் | 73,706 | 109,223 |
| ஆலோசனை கொடுப்பனவுகள் | 44,370 | 47,586 |
| சில்லறை செலவுகள் | 298,403 | 262,641 |
| **மொத்த தொகை** | **3,751,269** | **3,185,262** |

குறிப்பு இல: 6:5

<u>பராமரித்தலும் பழுதுபார்த்தலும்</u>

<u>மோட்டார் வாகனங்கள்</u>

| | | |
|---|---|---|
| பராமரித்தல், பழுதுபார்த்தல் சேவைகள் என்பன | 5,298,991 | 4,007,598 |
| கழி: டிசம்பர் 31 இல் கையிருப்பு | (1,150,589) | (709,089) |
| **வருடத்திற்கான செலவினம்** | **4,148,402** | **3,298,509** |

<u>இயந்திரங்கள்</u>

| | | |
|---|---|---|
| பராமரித்தல், பழுதுபார்த்தல் சேவைகள் என்பன | 7,794,271 | 8,557,064 |
| கழி: டிசம்பர் 31 இல் கையிருப்பு | (6,518,452) | (6,910,794) |
| **வருடத்திற்கான செலவினம்** | **1,275,819** | **1,646,271** |

<u>அலுவலக உபகரணங்கள்</u>

| | | |
|---|---|---|
| பராமரித்தல், பழுதுபார்த்தல் சேவைகள் என்பன | 737,287 | 799,526 |
| கழி: டிசம்பர் 31 இல் கையிருப்பு | (76,822) | (94,595) |
| **வருடத்திற்கான செலவினம்** | **660,465** | **704,931** |

<u>கட்டிடங்கள்</u>

| | | |
|---|---|---|
| பராமரித்தல், பழுதுபார்த்தல் சேவைகள் என்பன | 995,417 | 443,676 |
| கழி: டிசம்பர் 31 இல் கையிருப்பு | (393,530) | (386,509) |
| **வருடத்திற்கான செலவினம்** | **601,887** | **57,167** |
| **மொத்த தொகை** | **6,686,573** | **5,706,877** |

குறிப்பு இல: 6:6

| | | |
|---|---|---|
| நலன்புரி மற்றும் விளையாட்டு வசதிகள் | 294,106 | 143,990 |
| மருத்துவ திட்டம் | 374,965 | 408,515 |
| உபசரணை | 190,530 | 77,268 |
| ஓய்வு விடுமுறை பணமாக்கம் | 9,440 | 8,909 |
| **மொத்த தொகை** | **869,041** | **638,682** |

குறிப்பு இல: 6:7

<u>பிற மீண்டெழும் செலவுகள்</u>

| | | |
|---|---|---|
| காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைகள் | 204,944 | 272,783 |
| சீருடைகள் | 347,908 | 18,118 |
| சஞ்சிகைகளும் புதினப் பத்திரிகைகளும் | 90,610 | 46,474 |
| பிரசுர மற்றும் விளம்பர செலவுகள் | 472,391 | 597,905 |
| வங்கி கட்டணங்கள் | 118,987 | 82,587 |
| பதவி அணியினர் காப்புறுதி | - | 117,485 |
| வைத்திய பரிசோதனை கட்டணங்கள் | 27,360 | - |
| சட்ட செலவுகள் | 277,274 | 5,490 |
| குற்றப்பணமும் மிகை விதிப்பும் | 24,240 | - |
| அறவிட முடியாக்கடன்கள் | 1,012,510 | 957,707 |
| பொருளாதார சேவை கட்டணங்கள் | 556,577 | 558,921 |

| | | |
|---|---|---|
| அன்பளிப்புகள் | - | 5,000 |
| முத்திரை வரி | 4,500 | 4,450 |
| வாகன சேவை - இரத்மலானை | 156,030 | 328,667 |
| வாடகை கட்டணங்கள் | 132,516 | 498,800 |
| பயிற்சி நிலைய செலவினம் (அநுராதபுரம்) | 111,017 | 602,640 |
| தேசத்திற்கு மகுடம் சூடல் செலவினம் | 178,798 | - |
| **மொத்த தொகை** | **3,715,662** | **4,097,028** |

**குறிப்பு இல: 6:8**
**கருத்திட்ட செலவினம் (திறைசேரி மானியம்)**
**கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வரையான கரையோர புவிச்சரிதவியல் ஆய்வு**

| | | |
|---|---|---|
| சம்பளங்களும் கூலிகளும் | | 1,176,535 |
| ஊழியர் சேமலாப நிதியம் - 12% | | 73,776 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் - 3% | | 18,441 |
| மேலதிக நேரமும் விடுமுறைக் கொடுப்பனவும் | | 114,821 |
| பிரயாண செலவுகள் | | 147,852 |
| காகிதாதிகளும் அலுவலக தேவைகளும் | | 483 |
| எரிபொருளும் உராய்வு நீக்கிகளும் | 1,188,190 | |
| கழி: இறுதி இருப்பு | (312,792) | 875,398 |
| பிரசுர மற்றும் விளம்பர செலவுகள் | | 20,966 |
| நிலத்தடி நீர் - பிற | | 1,445 |
| துளைபோடு செயற்பாடுகள் - உதிர்வன | 7,188,406 | |
| கழி: இறுதி இருப்பு | (2,424,417) | 4,763,989 |
| மோட்டார் வாகன பராமரிப்பு | | 21,310 |
| எந்திரங்களின் பராமரிப்பு | | 3,875 |
| ஆய்வுகூட உபகரணங்கள் பராமரிப்பு | | 8,950 |
| கட்டிடங்கள் பராமரிப்பு | | 485 |
| தபால் மற்றும் தொலைத்தொடர்பு | | 18,013 |
| சில்லறை செலவுகள் | | 200 |
| வாடகை, இறைகள் மற்றும் இறைவரி | | 120,000 |
| **உப கூட்டுத்தொகை** | | **7,366,539** |
| **விழிப்புணர்வு திட்டங்கள் / நீர் பகுப்பாய்வுகள் (அநுராதபுரம்)** | | |
| சம்பளங்களும் கூலிகளும் | | 79,698 |
| ஊழியர் சேமலாப நிதியம் - 12% | | 6,423 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் - 3% | | 1,633 |
| மேலதிக நேரமும் விடுமுறைக் கொடுப்பனவும் | | 229,886 |
| பிரயாண செலவுகள் | | 99,144 |
| எரிபொருளும் உராய்வு நீக்கிகளும் | | 176,198 |
| பயிற்சி நிலைய செலவினம் (அநுராதபுரம்) | 1,144,297 | |
| கட்டிடங்கள் பராமரிப்பு | | 12,900 |
| அலுவலக உபகரணங்கள் பராமரிப்பும் பழுதுபார்த்தலும் | 23,115 | |
| அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு | | 71,460 |
| நிலத்தடி நீர் பராமரிப்பு | | 120,960 |
| துளைபோடு செயற்பாடுகள் - உதிர்வன | | 27,786 |
| **உப கூட்டுத்தொகை** | | **1,993,500** |

**<u>மண்படுக்கை அமைப்பில் நீர்த்தன்மை மாற்றங்களின் ஆய்வு – அநுராதபுரம்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளங்களும் கூலிகளும் | | 577,977 |
| ஊழியர் சேமலாப நிதியம் - 12% | | 44,811 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் - 3% | | 11,230 |
| மேலதிக நேரமும் விடுமுறைக் கொடுப்பனவும் | | 39,120 |
| பிரயாணச் செலவுகள் | | 61,225 |
| எரிபொருளும் உராய்வு நீக்கிகளும் | | 126,762 |
| ஆய்வுகூட உபகரணங்கள் பராமரிப்பு | | 237,630 |
| மோட்டார் வாகனங்கள் பராமரிப்பு | | 51,235 |
| **உப கூட்டுத்தொகை** | | **1,149,990** |

**<u>பூகோள பட சேர்ப்புகள்</u>**

| | |
|---|---|
| மேலதிக நேரமும் விடுமுறைக் கொடுப்பனவும் | 4,508 |
| பிரயாணச் செலவுகள் | 16,825 |
| **உப கூட்டுத்தொகை** | **21,333** |

**<u>புத்தளம் மண்படுக்கையில் ஓரகத் தனிம ஆய்வுகள்</u>**

| | |
|---|---|
| மேலதிக நேரமும் விடுமுறைக் கொடுப்பனவும் | 10,260 |
| பிரயாணச் செலவுகள் | 23,120 |
| **உப கூட்டுத்தொகை** | **33,380** |

**பதவி அணியினர் பயிற்சி**

| | |
|---|---|
| செயலமர்வுகளும் கலந்துரையாடல்களும் | 290,764 |
| **உப கூட்டுத்தொகை** | **290,764** |
| **மொத்த தொகை** | **10,855,506** |

## நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் - தொடர்
## ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்
குறிப்பு இல: 7

| நிலையான சொத்துக்கள் | பெறுமதி/மதிப்பீடு 31.12.2011 அன்று ரூபா. | மேலதிகங்கள் வருடத்திற்கான ரூபா. | அகற்றல் சீராக்கல ரூபா. | பெறுமதி/மதிப்பீடு 31.12.2011 அன்று ரூபா. |
|---|---|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 75,694,306 | 18,214,596 | | 93,908,902 |
| இயந்திரங்கள், கைவினைக்கருவிகள் மற்றும் உபகரணங்கள் | 232,485,472 | 22,940 | | 232,508,412 |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 24,644,826 | 23,249,174 | (86,200) | 47,807,800 |
| தளபாடங்கள், துணைப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 10,346,645 | 3,366,258 | | 13,712,903 |
| கணினிகள் மற்றும் துணைக்கருவிகள் | 5,748,187 | 1,459,584 | | 7,207,771 |
| விஞ்ஞான உபகரணங்கள் | 2,633,671 | 28,423,316 | | 31,056,987 |
| புவியமைப்பியல் படங்கள் | 370,000 | 1,136,753 | | 1,506,753 |
| தற்காலிக கட்டிடங்கள் | 2,266,754 | | (2,266,754) | |
| வாசிகசாலை புத்தகங்கள் | 966,734 | | (966,734) | |
| நிலங்கள் | 714,274 | 8,600 | (9,360) | 713,514 |
| கட்டிடங்கள் | 882,056 | | (882,056) | |
| கட்டிட மேம்பாடுகள் | 5,570,415 | 2,107,089 | (4,031,072) | 3,646,432 |
| இயந்திரங்கள் மற்றும் வாகன செம்மைப்படுத்தல்கள் | 58,212,978 | 5,279,839 | (50,301,530) | 13,191,287 |
| கணினிகளின் செம்மைப்படுத்தல்கள் | 266,426 | 8,303,107 | (163,448) | 8,406,085 |
| **மொத்தம்** | **420,802,743** | **91,571,256** | **(58,707,154)** | **453,666,846** |

| பெறுமதி தேய்மானம் | மிகுதி 31.12.2011 அன்று ரூபா. | வருடத்திற்கான கட்டணங்கள் ரூபா. | அகற்றல் சீராக்கல் ரூபா. | மிகுதி 31.12.2011 அன்று ரூபா. |
|---|---|---|---|---|
| மோட்டார் வாகனம் | 64,943,464 | 6,274,131 | (212,500) | 71,005,095 |
| இயந்திரங்கள், கைவினைக்கருவிகள் மற்றும் உபகரணங்கள் | 218,322,683 | 18,754,464 | - | 237,007,147 |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 16,185,921 | 3,249,084 | (17,240) | 19,405,765 |
| தளபாடங்கள், துணைப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 7,391,018 | 394,264 | | 7,785,281 |
| கணினிகள் மற்றும் துணைக்கருவிகள் | 4,138,397 | 494,271 | | 4,633,167 |
| விஞ்ஞான உபகரணங்கள் | 2,623,469 | 2,550 | | 2,626,019 |
| புவியமைப்பியல் படங்கள் | - | 74,000 | | 74,000 |
| தற்காலிக கட்டிடங்கள் | 2,266,749 | | (2,266,749) | |
| வாசிகசாலை புத்தகங்கள் | 917,044 | | (917,044) | |
| கட்டிடங்கள் | | 882,052 | | (882,052) |
| கட்டிட மேம்பாடுகள் | 2,670,008 | - | (2,670,008) | - |
| இயந்திரங்கள் மற்றும் வாகன செம்மைப்படுத்தல்கள் | 36,269,357 | - | (36,269, 357) | - |
| கணினிகளின் செம்மைப்படுத்தல்கள் | 109,722 | - | (109,722) | - |
| **மொத்தம்** | **356,720,384** | **29,230,764** | **(43,344,672)** | **342,606,474** |
| தேறிய புத்தகப் பெறுமதி | 64,082,359 | | | 111,060,372 |

**குறிப்பு:**

2011.12.31ஆம் திகதியன்றவாறு, சட்டப்படியான சொந்தமற்றுச் சபையினால் பாவிக்கப்படும் நிலம் மற்றும் கட்டிடங்களின் விபரம் பின்வருமாறு.

| நிலம் | கட்டிடங்கள்(கிட்டத்தட்ட) |
|---|---|
| தலைமையகம் | 8477 சதுர அடி |
| வேலைத்தளம் இரத்மலானை | 32960 சதுர அடி |
| பயிற்சி நிலையம், அநுராதபுரம் | 11506 சதுர அடி |
| தங்கு விடுதி, அநுராதபுரம் | 3038 சதுர அடி |
| பிராந்திய அலுவலகம், மொனராகலை | 1805 சதுர அடி |
| பிராந்திய அலுவலகம், அம்பாந்தோட்டை | 1474 சதுர அடி |
| பிராந்திய அலுவலகம் | 1815 சதுர அடி |
| வேலைத்தளம், வவுனியா | 1082 சதுர அடி |

## நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் - தொடர்
### குறிப்பு இல: 8
### இருப்புகள்

| | 2011<br>ரூபா. | 2010<br>ரூபா. |
|---|---|---|
| **மூலப்பொருட்களும் உதிரிப்பாகங்களும்** | | |
| வாகன உதிரிப்பாகங்கள் | 1,150,590 | 709,089 |
| எரிபொருளும் உராய்வு நீக்கிகளும் | 299,198 | 448,370 |
| களஞ்சிய மூலப்பொருட்கள் | 15,974,780 | 8,161,533 |
| கட்டிட பராமரிப்பு | 393,530 | 386,509 |
| காகிதாதிகள் | 307,388 | 193,592 |
| இயந்திர உதிரிப்பாகங்கள் | 6,518,452 | 6,910,794 |
| அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு | 76,822 | 94,595 |
| ஆய்வுகூடம் | 1,880,573 | - |
| | **26,601,333** | **16,904,483** |
| **மூலப்பொருட்களும் உதிரிப்பாகங்களும் - CN கருத்திட்டம்** | | |
| எரிபொருளும் உராய்வு நீக்கிகளும் | 312,792 | - |
| களஞ்சிய மூலப்பொருட்கள் | 2,424,417 | - |
| | **2,737,209** | **-** |
| **மொத்தத் தொகை** | **29,338,542** | **-** |

### குறிப்பு இல: 9
**வியாபாரம் மற்றும் பிற வரவேண்டியவை**

| | 2011 | 2010 |
|---|---|---|
| **பதவி நிலை அணியினர்** | | |
| (01) புத்தக முற்பணம் | - | 330,000 |
| (02) கஷ்டநிலை கடன் | 7,185,372 | 5,496,114 |
| (03) பண்டிகை முற்பனம் | 212,000 | 232,500 |
| (04) பயண முற்பணம் | 47,051 | 120,063 |
| (05) சயிக்கிள் கடன் | 32,724 | 98,009 |
| (06) பதவி அணியினர் கடன்பட்டோர். | 204,912 | 164,907 |
| **உப கூட்டுத்தொகை** | **7,682,059** | **6,441,592** |
| **பிற** | | |
| (07) வியாபாரம் | 1,826,269 | 5,385,339 |
| (08) வைப்புகள் | 60,155 | 160,155 |
| (09) வழங்குநர்க்கான முற்பணம் | 140,847 | 100,648 |
| (10) பிடிப் பணம் | 2,130,712 | 900,224 |
| (11) பிடித்து வைத்திருக்கும் வரி | 1,461,870 | 1,443,510 |
| (12) வங்கி உத்தரவாதம் | 53,579 | 468,779 |
| (13) DSWRPP -வரவேண்டியவை | 740,878 | - |
| **மொத்தத் தொகை** | **6,414,310** | **8,458,654** |

### குறிப்பு இல: 10

| **முற் கொடுப்பனவுகள்** | 2011<br>ரூபா. | 2010<br>ரூபா. |
|---|---|---|
| பதவி அணியினர் காப்புறுதி | 8,313 | 8,398 |
| புதினப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் | 19,960 | 30,140 |

| | | |
|---|---|---|
| அலுவலக உபகரணப் பராமரிப்பு | - | 1,551 |
| புத்தளம் நகர சபை - இறைகள் மற்றும் இறைவரி | 15,508 | - |
| **மொத்த தொகை** | **43,781** | **40,089** |

குறிப்பு இல: 11

<u>காசும் காசிற்கு சமனானவையும்</u>

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | இலங்கை வங்கி – யோர்க் வீதி கிளை | (0002026295) | 55,751 | 2,227,807 |
| (2) | இலங்கை வங்கி – ரொறிங்ரன் கிளை | (0002322267) | 2,559,483 | 844,787 |
| (3) | இலங்கை வங்கி – ரொறிங்ரன் கிளை | (0002322268) | 50,850 | 34,325 |
| (4) | இலங்கை வங்கி – ரொறிங்ரன் கிளை | (0005342839) | 349,334 | 258,907 |
| (5) | இலங்கை வங்கி – யாழ்ப்பாணக் கிளை | (19860) | - | 7,096 |
| (6) | தேசிய சேமிப்பு வங்கி – பம்பலப்பிட்டி | (100230211818) | 10,938,400 | 22,530,905 |
| (7) | தேசிய சேமிப்பு வங்கி – பொரல்லை | (1-0061-03-31236) | 10,205 | 3,500 |
| (8) | தேசிய சேமிப்பு வங்கி – பொரல்லை | (1-0061-03-31287) | 1,427 | 1,000 |
| | **மொத்த தொகை** | | **14,466,450** | **25,908,329** |

குறிப்பு இல: 12

<u>பிற்போடப்பட்ட பொறுப்புகள்</u>

| **ஐந்தொகையில் இனங் காணப்பட்ட பணத்தொகை பின்வருமாறு** | **2011** ரூபா. | **2010** ரூபா. |
|---|---|---|
| வருட ஆரம்பத்தில் | 58,544,345 | 61,764,957 |
| கூட்டு: மாற்றுகை – JV - 40 | 25,740 | - |
| வருடத்திற்கான கட்டணம் / வைப்பு | 7,025,383 | 310,143 |
| செலுத்திய பங்களிப்பு | (2,627,146) | (3,530,755) |
| வருட இறுதியில் | 62,968,322 | 58,544,345 |

குறிப்பு இல: 13

| <u>கொடுபட வேண்டியவை (நடைமுறை பொறுப்பல்லாத)</u> | **2011** **ரூபா.** | **2010** **ரூபா.** |
|---|---|---|
| சக்தி பாதுகாப்பு | **-** | 240,000 |
| **மொத்த தொகை** | - | **240,000** |

குறிப்பு இல: 14

| <u>கொடுபட வேண்டியவை (நடைமுறை பொறுப்பு)</u> | **2011** **ரூபா.** | **2010** **ரூபா.** |
|---|---|---|
| (1) பதவி நிலை அணியினர் | | |
| 1:1 பதவி நிலை அணியினர் கடன் கொடுத்தோர் | 10,404 | 10,404 |
| 1:2 திறைசேரி மானியம் - உத்தியோகத்தர் பயிற்சி | 9,236 | - |
| 1:3 கோரப்படாத கூலிகள் | - | 13,664 |
| 1:4 திறைசேரி மானியம் - பூகோளப்பட சேர்க்கை | 8,667 | - |
| 1:5 திறைசேரி மானியம் - ISP கருத்திட்டம் | 16,620 | - |
| **உப கூட்டுத்தொகை (1:1- 1:5)** | **44,927** | **24,068** |

| | | 2011 | 2010 |
|---|---|---|---|
| (2) | சேவை முற்பணம் | 12,774,194 | 15,903,603 |
| (3) | பிற: | | |
| 3:1 | கணக்காய்வு கட்டண ஏற்பாடு | 368,929 | 218,929 |
| 3:2 | பிற கடன் கொடுத்தோர் | 5,835,847 | 1,296,330 |
| | **உப கூட்டுத்தொகை (3:1- 3:2)** | **6,204,776** | **1,515,259** |
| (4) | தடுத்து வைக்கப்பட்ட கொடுப்பனவு | 119,000 | 18,811 |
| (5) | ஊழியர் சேமலாப நிதி - 10% | 986 | - |
| | **உப கூட்டுத்தொகை (4-6)** | **119,986** | **18,811** |
| (6) | கழி: பெறுமதிசேர் வரி - காசு | (6,418) | - |
| (7) | கழி: பெற வேண்டிய பெறுமதிசேர் வரி | (386,479) | (128,319) |
| | **கூட்டுத்தொகை** | 18,750,986 | 17,333,422 |

**<u>நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் - தொடர்</u>**
**குறிப்பு இல: 15**
**அட்டுறு செலவுகள்**

| | 2011<br>ரூபா. | 2010<br>ரூபா. |
|---|---|---|
| சம்பளங்களும் கூலிகளும் | 294,564 | 181,837 |
| பிரயாண செலவுகள் | 540,250 | 511,775 |
| மேலதிக நேரமும் விடுமுறைக் கொடுப்பனவும் | 704,472 | 392,201 |
| தொலைபேசி கட்டணம் | 99,624 | 57,828 |
| எரிபொருள் | 40,803 | 204,199 |
| மோட்டார் வாகனங்களின் பராமரிப்பு | 109,973 | 74,655 |
| இயந்திரங்களின் பராமரிப்பு | 171,128 | - |
| காகிதாதிகள் | 34,015 | 1,380 |
| அலுவலக உபகரண பராமரிப்பு | 43,220 | 21,133 |
| வல்லுநர் ஆலோசனைக் கட்டணம் | 4,590 | 3,090 |
| மின்சாரம் | 129,012 | 87,849 |
| வாடகை | 51,000 | 15,000 |
| கொரகாஹவெல நிலையம் | 2,150 | - |
| துளைபோடு செயற்பாடு – உதிரிகள் | 1,278,097 | 140,750 |
| நிலத்தடி நீர் பிற செலவுகள் | 535 | 2,166 |
| வங்கி கட்டணங்கள் | - | 2,250 |
| நீர் கட்டணங்கள் | 14,238 | 6,839 |
| உபசரணை | 1,790 | 3,875 |
| புதினப் பத்திரிகைகள் | 2,330 | 5,360 |
| ஊழியர் சேமலாப நிதியம் - 10% | 427,958 | 398,081 |
| ஊழியர் சேமலாப நிதியம் - 12% | 513,550 | 489,369 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் - 3% | 128,387 | 122,342 |
| சில்லறைச் செலவுகள் | 6,387 | 10,893 |
| வைத்திய செலவுகள் | 43,200 | 1,500 |
| முத்திரை வரி | 9,700 | 8,550 |
| கட்டிட பராமரிப்பு | - | 500 |
| பெறுமதிசேர் வரி - காசு | 174,200 | 60,807 |
| பெறுமதிசேர் வரி - காசு | 1,522,770 | 961,285 |
| பொருளாதார சேவை கட்டணங்கள் | - | 130,469 |
| கேட்பு முறி மற்றும் மீளளிப்பு வைப்பு | - | 5,000 |

| | | |
|---|---|---|
| கணினி மற்றும் உதிரிப்பாகங்கள் | - | 7,379 |
| பணிக் கொடை | - | 261,013 |
| பதவியணியினர் காப்புறுதி | - | 7,205 |
| ஆய்வுகூட உபகரணம் | 14,000 | 89,700 |
| ஆய்வுகூட பராமரிப்பு | 76,896 | 9,232 |
| தொழிலாளர் கட்டணங்கள் | - | 16,100 |
| பிரசுரம் | 14,337 | 3,000 |
| வாகன பராமரிப்பு - இரத்மலானை | - | 190,000 |
| நலன்புரி செலவினம் | 8,000 | 32,000 |
| பயண முற்பணம் | 3,000 | 3,000 |
| பணிப்பாளர் கட்டணங்கள் | 64,680 | - |
| சட்ட ஆலோசனை கட்டணங்கள் | 29,800 | - |
| வைத்தியப் பரிசோதனை செலவுகள் | 1,500 | - |
| உழைக்கும் போது செலுத்தல் வரி | 2,045 | - |
| சேவை முற்பணம் | 3,037 | - |
| **மொத்த தொகை** | **6,565,238** | **4,519,612** |

**குறிப்பு இல: 16**
**பிணைப்பண வைப்புகள்**

| | முதல் வைப்புகள் | 2011 ரூபா. | 2010 ரூபா. |
|---|---|---|---|
| (1) திரு.டபிள்யு. பி.எஸ்.குணதிலக – காசாளர் | 3,500 | 10,205 | 3,500 |
| (2) திரு.கே.ஏ.விமால் - பண்டகசாலை பேணுபவர் | 500 | 1,407 | 500 |
| (3) திரு.என்.விக்ரமசிங்க - போசனசாலை | 5,000 | 5,000 | 5,000 |
| (4) திரு.விமால் அமரசிங்க - பண்டகசாலை பேணுபவர் | - | - | 500 |
| **மொத்த தொகை** | **9,000** | **16,631** | **9500** |

**குறிப்பு இல: 17**

**உரிமை முதல் மாற்றங்களின் பொருட்டு 03ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.**

நீர் வளங்கள் சபை.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No: LP/E/2012/13
ඔබේ අංකය / உமது இல / Your No.:
දිනය / திகதி / Dat: 2012 நவம்பர் 15

தலைவர்
நீர்வளங்கள் சபை

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(இ)ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் 2011 திசெம்பர் 31ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நீர்வளங்கள் சபையின் நிதிக்கூற்றுகள் மீதான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

---

இத்துடன் மேற்போந்த அறிக்கையின் ஆங்கில கூற்று அனுப்பப்படுகின்றது.

ஒப்பம்:- எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் அதிபதி

பிரதி: (1) செயலாளர், நிதி திட்டமிடல் அமைச்சு
(2) செயலாளர், நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சு

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை
INDEPENDENCE SQUARE, COLOMBO 07, SRI LANKA
දුරකථනය / தொலைபேசி / Telephone: 2691151
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2697451
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail: oaggov@sltnet.lk

**1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(இ)ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் 2011 திசெம்பர் 31ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நீர்வளங்கள் சபையின் நிதிக்கூற்றுகள் மீதான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை.**

2011 திசெம்பர் மாதம் 31ஆம் திகதியில் முடிவடைந்த சபையின் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு; இதனுள் 2011 திசெம்பர் 31ஆம் திகதியன்றான ஐந்தொகையும் வருமானக்கூற்றும், வருட முடிவிலான உரிமை முதல் கூற்றுகள் மற்றும் காசோட்டக்கூற்று மாற்றங்கள் அத்துடன் குறிப்பிடத்தக்கதான கணக்கீட்டுக் கொள்நெறிகள் மற்றும் பிற விளக்கல் தகவல்கள் என்பன அடங்கலாக, 1971ஆம் ஆண்டின் 38அம் இலக்க நிதிச்சட்டத்தின் 13(1)ஆம் பிரிவுடனும் 1964ஆம் ஆண்டின் 29ஆம் இலக்கச் சட்டத்தின் நீர்வளங்கள் சபையின் 17(2)ஆம் பிரிவுடனும் சேர்த்து இணைக்கப்படுவதும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதிச்சட்டத்தின் 14(2)(இ)ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் இச் சபையின் ஆண்டறிக்கையுடன் வெளியிடப்படவேண்டுமென என்னால் கருதப்படும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளன. நிதிச்சட்டத்தின் 13(7)(அ)ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக விரிவான அறிக்கையொன்று 2012 யூலை மாதம் 13ஆம் திகதியன்று இச்சபையின் தலைவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

### 1:2 நிதிக் கூற்றுகளுக்கான முகாமைத்துவப் பிரிவின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகளை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாகத் தயாரித்தலும் நேரான வழி முறையில் சமர்ப்பித்தலும் முகாமைத்துவப் பிரிவின் பொறுப்பாகும் என்பதுடன் மோசடி அல்லது வழு காரணமாக பொருள் ரீதியான தவறான கணக்கீட்டுக் கொள்கைகள் தயாரிப்பதைத் தவிர்க்கும் வகையான உள்ளகக் கட்டுப்பாடு பேணப்படுவதையும் அடக்குகின்றது.

### 1:3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது பொறுப்பானது எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக் கூற்றுகள் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதாகும். இலங்கையின் கணக்காய்வு நியமங்களுக்கமைவாக நான் எனது கணக்காய்வை மேற்கொண்டேன். இந்நியமங்கள் ஒழுக்கத்திற்குரிய தேவைப்பாடுகளுக்கு நான் கட்டுப்பட்டு இந்நிதிக்கூற்றுகள் பொருண்மை ரீதியாக பிழைபடு கூற்றுகள் இல்லாதவைகளாக இருப்பதை நியாயமாக உறுதிப்படுத்துவதாகும்.

ஒரு கணக்காய்வானது, நிதி கூற்றுகளிலுள்ள தொகைகளுக்கும் வெளிப்படுத்தல்களுக்கும் ஆதாரமாகவுள்ள சான்றுகளை பரிசோதனை அடிப்படையில் பரிசீலனை செய்வதை உள்ளடக்குகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட நடவடிக்கை முறைகள், கணக்காய்வு கூற்றுகள் மோசடி அல்லது வழு காரணமாக பிழைபடு கூற்றுகள் ஏற்பட்டுள்ளனவா என்பதை மதிப்பிடும் இடர் உள்ளடங்கலாக இடர் மதிப்பீடுகளை மேற்கொள்ளும்போது, கணக்காய்வாளர் அப்படியான சந்தர்ப்ப சூழ்நிலைகளில் கணக்காய்வு முறைகளைத் தயாரிக்கும்பொழுது, ஆனால் சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் செயற்திறனையிட்டதான அபிப்பிராயத்தை தெரிவிக்கும் நோக்கத்திற்கல்லாது, சபையினது கணக்குக் கூற்றின் தயாரிப்பு மற்றும் முறைமையான தயாரிப்பின் போதான உள்ளக கட்டுப்பாட்டு முறைகளைக் கவனத்தில் கொள்ளும் ஒரு கணக்காய்வானது, பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருந்துகை மற்றும் முகாமைத்துவத்தினால் தயாரிக்கப்பட்ட வரவு செலவுக் கணக்கின் ஏற்புடைமை மற்றும் நிதிக் கூற்றுகளின் உள்ளடங்கலான நிதிக் கூற்றுகள் என்பனவற்றையும் உள்ளடக்கும். 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 13ஆம் பிரிவின் (3) மற்றும் (4)ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் அதிபதிக்கு கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிருணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரங்களை வழங்குகின்றது.

என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தின் பொருட்டுப் போதுமானதும் உகந்ததுமானதென நான் நம்பிக்கை கொள்கின்றேன்.

### 1.4 தகுதியுடைமை அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 பந்தியின் பிரகாரம் எனது அபிப்பிராயம் தகுதியுடைமைத்துவம் உள்ளதாகும்.

## 2. நிதிக்கூற்றுகள்

### 2.1 தகுதியுடை அபிப்பிராயம்

2011 திசெம்பர் மாதம் 31ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கு நீர்வளங்கள் சபையானது ஒழுங்கான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணி வைத்திருந்ததென்பதும் இந்த அறிக்கையின் 2.2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் நிதிக்கூற்றுகளின் விளைவுகளைத் தவிர இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுவும் இவை 2011 திசெம்பர் மாதம் 31ஆம் திகதியில் இருந்தவாறான நீர்வளங்கள் சபையின் நிலைமைகளினதும் அப்போது முடிவடைந்த ஆண்டின் அதன் செயற்பாடுகளின் நிதிப்பேறுகளினதும் காசுப் பாய்ச்சல்களினதும் உண்மையானதும் நியாயமானதுமான தோற்றத்தைக் காண்பிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2:2 நிதிக் கூற்றுகள் மீதான கருத்துரைகள்

#### 2:2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

18ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு நியமங்களின் நியதிகளுக்கமைய 262,515,402 ரூபா பெறுமதியான ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்கள் மீள பெறுமதியிடல் செய்யப்படவில்லை.

#### 2:2.2 கணக்கீட்டு பற்றாக்குறைகள்

பின்வரும் கருத்துரைகள் மேற்கொள்ளப்படுகின்றன:

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணையின் பிரகாரம் 2011 திசெம்பர் 31ஆம் திகதியன்று பணிக்கொடைக்கான ஏற்பாடு 62,942,581 ரூபாவாக இருக்கையில், நிதிக் கூற்றுகளில் இது 62,968,322 ரூபாவாகக் காட்டப்பட்டுள்ளது. இதன் வித்தியாசம் 25,740 ரூபாவாகும்.

(ஆ) நிதிக் கூற்றுகளின்படி 2011 திசெம்பர் 31ஆம் திகதியன்று இருப்பின் பெறுமதி 26,601,330 ரூபாவாக காட்டப்பட்டு இருக்கையில், நேர் ஆய்வு அறிக்கைகளின்படி நடப்பாண்டிற்கான இருப்பின் பெறுமதி 26,541,791 ரூபாவாகும். எனவே இதன் வித்தியாசம் 59,539 ரூபாவாகும்.

(இ) 9 பிரதான வகைப்படுத்தல்களின் கீழ் வரும் 8078 இருப்பு, உதிரிப் பாகங்கள் மற்றும் காகிதாதிகள் பெறுமதியிடப்பட்டு நிதிக்கூற்றில் காட்டப்படவில்லை.

(ஈ) 1,345,717ரூபா தொகையான மீண்டெழும் செலவினம் மூலதனமாக்கப்பட்டுள்ளது.

(உ) சட்டமுறையான சொத்துவமின்மை காரணமாக, தலைமையக வளாகங்கள், இரத்மலானை தொழிற்சாலை, அநுராதபுரத்தில் உள்ள பயிற்சி நிலையம், அநுராதபுரத்தில் உள்ள உல்லாச விடுதி மற்றும் மொனராகலை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய இடங்களிலுள்ள வேலைத்தலங்கள் என்பனவான எட்டு நிலம் மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கறிக்கையில் காட்டப்படவில்லை.

#### 2:2.3 பெறத்தக்க கணக்குகளும் கொடுபடத்தக்க கணக்குகளும்.

பின்வரும் கருத்துரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 திசெம்பர் 31ஆம் திகதியன்று பெறவேண்டிய மொத்தத் தொகையாக 1,826,269 ரூபா காட்டப்பட்டு அதனுள் உள்ள 6145,766 ரூபா தொகையை இரு வருடங்களுக்கு மேலாகியும் அதனை அறவிடுவதற்குச் சபை எதுவித முயற்சியும் எடுக்கவில்லை.

(ஆ) கணக்கீட்டு கூற்றுகளின்படி மொனராகலை வைத்தியசாலையிலிருந்து பெறவேண்டிய தொகையாக 1,072,239ரூபா காட்டப்பட்டிருப்பினும் 761,808ரூபா தொகையே கொடுபட வேண்டிய தொகையாக உறுதிப்படுத்தியுள்ளது.

(இ) சேவைகளுக்கான முற்பணமாக 5,890,091 ரூபா தொகை 27 தாபனங்களிலிருந்தும் தனியார் நபர்களிடமிருந்தும் பெறப்பட்டிருப்பினும் சபையானது ஒரு வருடத்திற்கு மேலாகியும் உரிய தொழில்களைப் பூர்த்தி செய்ய தவறியுள்ளது.

2:2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

கணக்குகளின் பின்வரும் விடயங்கள் தொடர்பில் அவ்விடயங்களில் ஒவ்வொன்றிற்கும் எதிராகச் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள சான்று இல்லாமல் இருந்ததன் நிமித்தம் கணக்காய்வில் அவற்றைப் பற்றித் திருப்திகரமாக உறுதிப்படுத்த முடியவில்லை.

| கணக்குகளின் விபரங்கள் | பெறுமதி | வழங்கப்படாத சான்று |
|---|---|---|
| ரூபா | | |
| i). வர்த்தக வர வேண்டியவைகள் | 754,030 | உறுதிப்படுத்தல்கள் |
| ii). கடன் கொடுத்தோர்கள் | 11,312,594 | உறுதிப்படுத்தல்கள் |
| iii).வாகனங்கள் | 93,908,902 | அளவீட்டு ஆய்வுச் சபை அறிக்கைகள் |
| v). நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலை | 46,167,438 | விரிவான அட்டவணைகள் |
| மொத்தம் | 152,142,964 | |

2:2.5 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பனவற்றைக் கடைப்பிடிக்காமை.

**கணக்காய்வின்போது பின்வரும் விடயங்கள் கடைப்பிடிக்கப்படாமை அவதானிக்கப்பட்டுள்ளது.**

| <u>சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகளுக்கான தொடர்பு</u> | <u>கடைப்பிடிக்கப்படாமை</u> |
|---|---|
| அ) 1964ஆம் ஆண்டின் இலக்கம் 29 நீர்வளச் சபை சட்டத்தின் 14ஆம் பிரிவு | ஆய்வுக்குட்படுத்தப்பட்டதான வருடத்தில் ஆலோசனைக் குழுவொன்று செயற்பட்டிருக்கவில்லை |
| ஆ) <u>திறைசேரி சுற்று நிருபங்கள்</u> | |
| i) 1978 திசெம்பர் 19 திகதியிட்ட சுற்றுநிருப இல.842 | சுற்று நிருப அறிவுறுத்தலின்படி நிலையான சொத்துக்களின் பொருட்டு பதிவேடொன்று பேணப்படவில்லை. |
| ii) 2002 நவம்பர் 28 திகதியிட்ட IAI/2002/02 இலக்க சுற்று நிருபம் | இச் சுற்று நிருப அறிவுறுத்தலின்படி கணினிகள் மற்றும் கணினி உதிரிப் பாகங்கள் சம்பந்தமான விபரங்களைப் பதியும் பதிவேடொன்று பேணப்படவில்லை. |
| iii)2003 யூன் 02 திகதியிட்ட PED/12 இலக்க சுற்று நிருபம் * பகுதி 4.2.5 | பழைய, மந்தகதியில் அசையும் மற்றும் பழைய கழிவு வைப்புகள் என்பனவற்றை இனம் காணும் பொருட்டான அறிக்கை தயாரிக்கப்படவில்லை. |
| இ) <u>பொது நிர்வாக சுற்றறிக்கைகள்</u> | |
| i) 1990 ஒக்டோபர் 10 திகதியிட்ட 41/90 சுற்று நிருபத்தின் பகுதி 2.1 | சுற்று நிருப அறிவுறுத்தலின் படி, ஊர்த்திகள் பயன்படுத்தும் எரிபொருள் சபையினால் பரீட்சிக்கப்படவில்லை. |
| ii) 2002 பெப்ரவரி 26 திகதியிட்ட 01/2002 சுற்று நிருபம் | சபையின் வாகனங்களில் அரச முத்திரை மற்றும் சபையின் பெயர் பதியப்படவில்லை |

#### 2:2.6 வெளிவாரியான கொடுக்கல் வாங்கல்கள்

சபையின் தொழிலாளர்கள் புத்தளம், அநுராதபுரம், கிளிநொச்சி மற்றும் நாக தீபத்திற்குப் பயணம் செய்யும் பொருட்டு அமர்த்தப்பட்டதான 3 பேருந்துகளின் பொருட்டு வாடகைச் செலவாக 178,000 ரூபாவை 2011 திசெம்பர் மாதத்தில் உரிய அதிகாரமின்றி சபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி செயற்பாடு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி முந்திய ஆண்டின் 7,134,891 ரூபாவைக் கொண்ட இணையொத்த மிகையுடன் ஒப்பிடும்போது 2011 திசெம்பர் 31ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இச்சபையின் தொழிற்பாடு 11,195,727 ரூபாவைக் கொண்ட பற்றாக்குறைத் தொகையை பெறுபேறாகக் காட்டியுள்ளது. இது முந்திய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டில் நிதிச் செயற்பாடு 18,330,618 ரூபாவினால் சீர்கெட்டுள்ளது. இச்சீர்கேட்டிற்கான பிரதான காரணம் மீளாய்வாண்டில் செலவினம் 43,006,618 ரூபாவால் அதிகரித்துள்ளமை என்று கூறப்பட்டுள்ளது.

## 4. தொழிற்பாட்டு மீளாய்வு

### 4.1 நிதிச் செயலாற்றுகையும் பௌதிகச் செயலாற்றுகையும்

இச் சபையினால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட வருடாந்த மதிப்பீடு மற்றும் தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் இச் சபையின் நிதிச் செயலாற்றுகை மற்றும் பௌதிகச் செயலாற்றுகை ஆகியவற்றின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) நிதிச் செயலாற்றுகை**

| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா | உண்மை வருமானம் ரூபா | வேறுபாடு ரூபா | வேறுபாட்டின் விகிதாசாரம் விகிதம் |
|---|---|---|---|---|
| நீர் புவிச்சரிதவியல் ஆய்வுகள் | 7,500.000 | 4,616,928 | (2,883,072) | (38) |
| குழாய்க்கிணறு நிர்மாணங்கள் | 30,000,000 | 43,155,836 | 13,155,836 | 44 |
| கை பம்புகள் நிறுவுதல் | 2,500,000 | 3,945,607 | 1,445,607 | 58 |
| நீர் இறைப்பு பரிசோதனைகள் | 2,000,000 | 2,737,943 | 737,943 | 37 |
| குழாய்க் கிணறுகள் சுத்திகரித்தல் | 1,800,000 | 2,521,993 | 721,993 | 40 |
| நீர் மாதிரி பகுப்பாய்வு | 500,000 | 1,835,378 | 1,335,378 | 267 |
| நீர் புவிச்சரிதவியல் ஆய்வுகள் | 7,500.000 | 4,616,928 | (2,883,072) | (38) |
| புத்தளம் மணப்படுக்கையில் ஓரகத்தனிம பகுப்பாய்வு | 100,000 | 33,380 | (66,620) | (67) |
| கொழும்பிலிருந்து நீர் கொழும்பு வரை நீர் புவிச்சரிதவியல் கரையோர ஆய்வு | 20,000,000 | 7,366,539 | (12,633,461) | (63) |
| அநுராதபுர மணப்படுக்கை முறையில் நீரின் தர நிலை மாற்ற ஆய்வு | 2,000,000 | 1,149,990 | (850,010) | (43) |
| நிலப் படங்கள் சேர்ப்பு | 200,000 | 21,333 | (178,667) | (89) |
| காற்றாலைகள் நீர் இறைப்பு பரிசோதனைகள் | 250,000 | 110,440 | (139,560) | (56) |

| | | | | |
|---|---|---|---|---|
| பூகோள தகவல் தொகுதி வருமானம் | 50,000 | 7,000 | (43,000) | (86) |
| பொறிகளைச் சுத்திகரித்தலும் நீர் மாசுபடல் கட்டுப்பாடும் | - | 338,826 | 338,826 | 00 |
| நிலத்தடி நீர் அபிவிருத்தி | - | 14,118,464 | 14,118,464 | 00 |

<u>செலவினம்:</u>

| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா | உண்மை வருமானம் ரூபா | வேறுபாடு ரூபா | வேறுபாட்டின் விகிதாசாரம் விகிதம் |
|---|---|---|---|---|
| பணியாளர் கொடுப்பனவு | 200,000 | 404,227 | (204,227) | (102) |
| பணிக்கொடை | 4,000,000 | 6,966,770 | (2,966,770) | (74) |
| பிற கொடுப்பனவுகள் | 25,000 | 32,750 | (7,750) | (31) |
| வெளிநாட்டு பயணங்கள் | 150,000 | - | 150,000 | 100 |
| துளையிடுதல் வேலைகளுக்கான நுகர்வு பொருட்கள் | 20,000,000 | 34,503,522 | (14,503,522) | (73) |
| ஆய்வுகூட நுகர்வு பொருட்கள் | 1,000,000 | 3,150,692 | (2,150,692) | (215) |
| பிற நுகர்வு பொருட்கள் | 200,000 | 372,540 | (172,540) | (86) |
| செயலமர்வுகளும் கருத்தரங்குகளும் | 300,000 | 18,150 | 281,850 | 94 |
| நீர் கட்டணங்கள் | 100,000 | 73,706 | 26,294 | 26 |
| சிறு செலவுகள் | 400,000 | 298,405 | 101,595 | 25 |

<u>பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்பு சேவை:</u>

| | | | | |
|---|---|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 3,800,000 | 5,304,848 | (1,504,848) | (40) |
| அலுவலக உபகரணங்கள் | 400,000 | 737,287 | (337,287) | (84) |
| கட்டிடங்கள் | 300,000 | 995,417 | (695,417) | (232) |
| நலன்புரி மற்றும் விளையாட்டு வசதிகள் | 150,000 | 294,106 | (144,106) | (96) |
| உபசரிப்பு | 80,000 | 190,531 | (110,531) | (138) |
| விடுமுறைக்கான கொடுப்பனவு | 40,000 | 9,440 | 30,560 | 76 |
| சீருடைகள் | 250,000 | 347,908 | (97,908) | (39) |
| விளம்பரங்கள் மற்றும் பத்திரிகை அறிவித்தல் செலவினம் | 300,000 | 472,391 | (172,391) | (57) |
| பதவி அணியினர் காப்புறுதி | 50,000 | - | 50,000 | 100 |
| வைத்திய பரிசோதனை செலவுகள் | 20,000 | 27,360 | (7,360) | (37) |
| சட்ட செலவுகள் | 150,000 | 277,274 | (127,274) | (85) |
| முத்திரை வரி | 1,000 | 4,500 | (3,500) | (350) |
| அநுராதபுர பயிற்சி நிலைய செலவுகள் | 1,000,000 | 111,017 | 888,983 | 89 |
| கூலிக்கமர்த்தல் செலவுகள் | - | 132,516 | (132,516) | 00 |

ஆ) பௌதிகச் செயலாற்றுகை

| விடயம் | மதிப்பிட்ட அலகுகள் | பூர்த்தி செய்யப்பட்ட அலகுகள் | வேறுபாடு |
|---|---|---|---|
| **உருவாக்கப்பட்ட நிதி கருத்திட்டம்** | | | |
| நீர் புவிச்சரிதவியல் ஆய்வுகள் | 50 | 145 | 95 |
| குழாய்க் கிணறு நிர்மாணிப்புகள் | 50 | 74 | 24 |
| கை நீர் இறைப்பிகள் நிறுவுதல் | 75 | 52 | 23 |
| நீர் இறைப்பு பரிசோதனைகள் | 40 | 40 | - |
| குழாய்க் கிணறுகள் சுத்திகரித்தல் | 40 | 57 | 17 |
| நீர் மாதிரி பகுப்பாய்வு | 500 | 3,206 | 2,706 |

**திரட்டிய நிதி கருத்திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| நீர் புவிச்சரிதவியல் ஆய்வுகள் | 150 | 43 | 107 |
| பரீட்சார்த்த கிணறுகள் நிர்மாணம் | 150 | 11 | 139 |
| நீர் இறைப்பு பரிசோதனைகள் | 50 | - | 50 |
| நீர் மாதிரி பகுப்பாய்வு | 150 | 200 | 50 |
| கிணறுகளின் அவதானிப்பு | 100 | 200 | 100 |
| மட்டப்படுத்தல் | 150 | - | 150 |
| பரிட்சார்த்த முனையுடன் அவதானிப்பு வலையமைப்பை தாபித்தல் | 400 | 150 | 250 |
| நீர் மாதிரி பகுப்பாய்வு சேகரிப்பு | 500 | 400 | 100 |

**இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புரைகள் செய்யப்படுகின்றன.**

i) மீளாய்வாண்டில் பொறி சுத்தமிடல், நீர் மாசுபடுதல் கட்டுப்பாடு மற்றும் நிலத்தடி நீர் அபிவிருத்தி என்பனவின் பொருட்டு 14,457,293 ரூபா வருமானமாகப் பெற்றிருப்பினும் இச் செயற்பாடுகள் நடப்பாண்டில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

ii) மீளாய்வுக்குட்படுத்தப்பட்டதான நடப்பாண்டில் நீர் புவிச்சரிதவியல் ஆய்வுகள், குழாய்க்கிணறு நிர்மாணங்கள், கைநீர் இறைப்பிகள் நிறுவுதல், நீர் இறைப்பு பரிசோதனைகள், குழாய்க் கிணறுகள் சுத்திகரித்தல் மற்றும் நீர் மாதிரி பகுப்பாய்வுகள் என்பனவற்றின் பொருட்டு சபை 58,813,685 ரூபாவை வருமானமாகப் பெற்றிருப்பினும் ஒவ்வொரு செயற்பாட்டின் பொருட்டும் விவரமான மதிப்பீடு செய்திருக்கப்படவில்லை என கணக்காய்வின் போது தெரிவாகியுள்ளது. மேலும், உண்மையான வருமானத்தை உண்மையான செலவுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் வகையில் ஒவ்வொரு செயற்பாட்டினதும் உண்மையான செலவினம் பதிவு செய்யப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

iii) 50 நீர் இறைப்பு பரிசோதனைகள் மற்றும் 150 மட்டப்படுத்துகை சபையினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் இதில் எதுவும் நடப்பாண்டிற்குள் செயற்படுத்தப்படவில்லை.

iv) வெளிநாட்டுப் பிரயாணத்திற்கென 150,000 ரூபா மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இத் தொகை பாவிக்கப்படவில்லை என்பதுடன் 132,516 ரூபா வாடகைச் செலவின் பொருட்டு வரவு செலவுக் கணக்கில் மதிப்பீடு செய்யப்படவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயல்திறமையின்மைகள்

பின்வரும் அவதானிப்புரைகள் செய்யப்படுகின்றன.

அ) அறவிடுவதற்கு இயலாமையின் காரணமாக முன்னைய வருடங்களிலிருந்து முன்கொணரப்பட்ட வரவேண்டிய 1,689,960 ரூபா தொடர் ஆண்டில் பதிவழிக்கப்பட்டுள்ளது.

ஆ) சபையின் 5 துழைக் கருவிகளின் உடைந்த மணித்தியால அளவியைப் பழுது பார்ப்பதற்கு சீரான நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. எனவே, மேற்கொள்ளப்பட்ட எரிபொருட் செலவினம் கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் பரிசோதிக்க முடியவில்லை

இ) மூலதனச் செலவின் பொருட்டு பகிர்வுக் கணக்கில் 60,000,000 ரூபாவிற்கான மதிப்பீட்டொதுக்கம் செய்யப்பட்டிருப்பினும் மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட நடப்பாண்டில் 17,070,000 ரூபா மாத்திரமே பாவிக்கப்பட்டுள்ளது. மொத்த மதிப்பீட்டொதுக்கத்தில் சபையானது 42,930,000 ரூபாவை அல்லது அதன் 72 சத விகிதத்தைப் பாவிக்கத் தவறிவிட்டது.

ஈ) நீர்வளச் சபையின் 1999ஆம் ஆண்டின் சட்ட இலக்கம் 42 பகுதி 12இன் பிரகாரம் பின் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் சம்பந்தமாகச் சபையானது கருத்தமைந்த செயற்பாடுகளை மேற்கொள்ளவில்லை

i)

- நாட்டின் நீர்வளங்களினது கட்டுப்பாடு, ஒழுங்குவிதி மற்றும் அபிவிருத்தி (பேணுகை மற்றும் பாவனை உட்பட)

ii)

- ஆறுகள், அருவிகள் மற்றும் பிற நீர் வளங்கல்களின் மாசுபடுகை

iii)

- கீழ்க்காணும் குறிக்கோள்களுடன் நீர் வளங்களின் கட்டுப்பாடு மற்றும் பாவனை சம்பந்தமாக தேசிய கொள்கைகளை உருவாக்கல்.
- பன்முகப் பயன்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நீர்வளங்களின் பாவனை
- வீட்டுப் பாவனை மற்றும் கைத்தொழில்களுக்கான வழங்கல்களின் பொருட்டு நீர்வளங்கல்களின் குறுகியகால மற்றும் நீண்டகால முன்னேற்பாடுகள்
- உப்புத்தன்மைக் கட்டுப்பாடு

iv) நாட்டின் நிலத்தடி நீர்வளத்தைப் பாதுகாத்தல், பாவித்தல், கட்டுப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு அகல்விரிவான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டங்கள்

v) நீர்ப்பாறைகள் சம்பந்தப்பட்ட அடிப்படை தகவல் மற்றும் பிற ஆய்வுகள் சம்பந்தத்தில் அரசாங்க திணைக்களங்கள், உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் அரசாங்க கூட்டுறவு தாபனங்கள் என்பனவற்றுடன் இச் செயற்பாடுகள் சம்பந்தமாக கூட்டிணைந்து செயற்படுதல்.

vi) அரசாங்க திணைக்களங்கள், உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் அரச கூட்டுறவு தாபனங்களினால் நாட்டின் நிலத்தடி நீர் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், புள்ளிவிபர ஆய்வுகள், கருத்திட்டங்கள் மற்றும் பிரேரணைகள் என்பவற்றையிட்டு பகுப்பாய்வு அறிக்கைகள்.

vii) அடி நிலத்தில் உள்ள நீர்வளங்கள் சம்பந்தமான பேணுதல், பாவித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் சம்பந்தமாக அரசாங்க திணைக்களங்கள், உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் என்பனவற்றினால் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள் சம்பந்தமாக அதன் சாத்தியக்கூறுகள், நன்மைகள் மற்றும் பொருளதார செயல்சாத்தியம் என்பனவற்றை அவைகளுடன் கூட்டிணைத்து செயற்படல்.

## 4.3 தொழிலாளர்களின் பணிக்கொடை நிதியம்

2011 திசெம்பர் 31ஆம் திகதியன்றில் பணக்கொடைக் கொடுப்பனவின் பொருட்டு 62,909,709 ரூபா சபையின் கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பினும் பின்னர் அப்படியான கொடுப்பனவுகள் அப்பப்ப ஏற்படும் போது கொடுப்பனவு செய்யும் பொருட்டான முதலீட்டில் 10,938,400 ரூபா மாத்திரமே மிகுதியிருந்தது. மேலும் வருங்காலத்தில் பணிக்கொடைக் கொடுப்பனவு செய்யும் பொருட்டுப் பரிபாலிக்கப்பட்ட சேமிப்புக் கணக்கிலிருந்து சபையின் நாளாந்த செலவினத்தை ஈடு செய்யும் பொருட்டு 14,740,000 ரூபா பணம் எடுக்கப்பட்டுள்ளது.

## 5. கணக்குப் பொறுப்பும் நல்லொழுகையும்

## 5.1 வரவு செலவுக் கட்டுப்பாடு

சபையின் பாதீடு செய்யப்பட்ட வரவு மற்றும் செலவினத்திற்கும் உண்மையான வரவு செலவினத்திற்கும் இடையே குறிப்பிடத்தக்களவு வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. இதன்படி, முகாமைத்துவ கட்டுப்பாட்டின் பொருட்டு வரவு செலவு மதிப்பீடு ஓர் பயனுருவாக்க கருவியாகக் கொள்ளவில்லை என்பதைக் குறிக்கின்றது.

## 5.2 வருடாந்த அறிக்கைகளின் சமர்ப்பிப்பு

நிதிச்சட்டத்தின் பகுதி 14(3) இன் பிரகாரம் 2008,2009 மற்றும் 2010ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றிற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 6. விதிமுறைகளும் கட்டுப்பாடுகளும்

நிதிச் சட்டத்தின் 13(7)(அ) ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக கணக்காய்வின் போது விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கிடையே அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் சம்பந்தமாக சபையின் தலைவருக்கு விரிவானதொரு அறிக்கை என்னால் தெரிவிக்கப்பட்டுள்ளது. கீழே குறிப்பிடப்படும் கட்டுப்பாடுகள் சம்பந்தமாக விசேட கவனம் அவசியமாகின்றது.

அ) நிதி மற்றும் உண்மையான செயற்பாடு

ஆ) மதிப்பீடு

இ) கடனாளிகள் மற்றும் கடன் கொடுநர்

ஈ) சட்டங்கள் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளைப் பேணல்

உ) தீர்மானிக்கப்பட்ட செயற்திட்டங்களின் செயலாக்கம்

ஒப்பம்:- எச்.ஏ.எஸ்.சமரவீர

கணக்காய்வாளர் அதிபதி

වාරිමාර්ග හා ජල සම්පත් කළමනාකරණ අමාත්‍යාංශය
நீர்ப்பாசனம் மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சு
MINISTRY OF IRRIGATION & WATER RESOURCES MANAGEMENT

ජල සම්පත් මණ්ඩලය
நீர் வளச் சபை
WATER RESOURCES BOARD

මගේ අංකය / எனது இல / My No. : ඩබ.ලිව.ආර්බී/අයිඒ/32 — දිනය / திகதி / Date : — ඔබේ අංකය / உமது இல / Your ref : 2012. 08. 30.

WRB/IA/32 21.12.2012

கணக்காய்வாளர் அதிபதி
கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம்
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(இ)ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் 2011 திசெம்பர் 31ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நீர்வளங்கள் சபையின் நிதிக்கூற்றுகள் மீதான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

---

உங்களது கவனத்தின் பொருட்டு எனது பதில்கள் கீழே தரப்பட்டுள்ளன:

## 2:2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

தொழில்நுட்ப உதவிகள் பெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் சொத்துக்கள் வருங்காலத்தில் மீள் மதிப்பீடு செய்யப்படும்.

## 2:2.2 கணக்கீட்டு பற்றாக்குறைகள்

**பின்வரும் பதில்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணையில் பணிக்கொடைக்கான ஒதுக்கமாகிய 25,740 ரூபா பதியப்பட்டிருக்கவில்லை. ஆனால் தாபனத்தின் அட்டவணையில் இத்தொகை ஏற்கனவே பதியப்பட்டுள்ளது.

ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட சரிபார்த்தல் அறிக்கையில் பல பொருட்களின் பெறுமதிகள் குறிப்பிடப்படாதிருந்தமையின் காரணமாக இந்த வித்தியாசம் ஏற்பட்டது. எனினும் தாபனத்தின் சரிபார்த்தல் அறிக்கையில் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிற்காலத்தில் இது மாதிரி நடவாதிருப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

සභාපති / தலைவர் / Chairman — Tel : 011 2696910, Fax : 011 2696894
ක්‍රියාකාරී අධ්‍යක්ෂ / தொழிற்படு பணிப்பாளர் / Working Director — Tel / Fax : 011 2696429
සාමාන්‍යාධිකාරී / பொது முகாமையாளர் / General Manager — Tel / Fax : 011 2689772
පොදු කාර්යාලය / பொது அலுவலகம் / General Office — Tel : 011 2697050, 011 2694835
Web Site : www.wrb.gov.lk E-mail : wrbmiwm@sltnet.lk/wrbcmb@sltnet.lk
2 ඒ. හෙක්ටර් කොබ්බෑකඩුව මාවත, කොළඹ 07. 2ஏ,ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை, கொழும்பு 07. 2A, Hector Kobbekaduwa Avenue, Colombo 07.

இ) பொருட்களின் பல உதவிக்கொடையாகக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் மதிப்பீடு செய்யப்படவில்லை. சில பொருட்கள் பாவிக்கப்பட்டு பண்டகசாலைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இவைகளைத் தவிர மற்றைய பொருட்கள் விலை மதிக்கப்படவில்லை. வருங்காலத்தில் விலை மதிப்பீடு செய்யப்பட்டு பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஈ) திறைசேரியின் மூலதன மானியத்திலிருந்து பெறப்பட்ட 1,345,717 ரூபா மூலதனமாக்கப்பட்டு மூலதன செலவினத்திற்காகச் செலவிடப்பட்டது.

உ) அநுராதபுர பயிற்சி நிலையம் மற்றும் மொனராகலை நிலங்களுக்கான சட்டப்படியான உறுதிகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ஏற்கனவே கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது). அம்பாந்தோட்டை மற்றும் அநுராதபுர சுற்றுலாப் பயண வளாகங்களை நில அளவை செய்வதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஊ) இரத்மலானை தொழில் நிலையத்தின் பொருட்டு தேசிய பௌதிகவியல் திட்டமிடல் திணைக்களம் மாற்றிடமொன்றை வழங்கும். இதையிட்டதான கலந்துரையாடல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

வவுனியா நிலப்பரப்பு மற்றும் தலைமையகத்திற்கான சட்டமுறை உரிமை பெறுவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும். யாழ்ப்பாண அலுவலகம் வாடகைக்குப் பெறப்பட்டதொன்றாகும்.

எ) 5 வாகனங்கள் சம்பந்தமாக சட்டப்படியான உரிமை பெறுவதன் பொருட்டு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று தயாரிக்கப்பட்டு அமைச்சரவைக்கு அனுப்பப்படும் வண்ணம் நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### 2:2.3 பெறத்தக்க கணக்குகளும் கொடுபடத்தக்க கணக்குகளும்

அ) • வவுனியா பிரதேச செயலாளர் மிகுதிப் பணத்தைச் செலுத்துவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

- அவசியமான விபரங்கள் இல்லாமையின் காரணமாக தேசிய நீர் வழங்கல் சபையானது குறிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்த முடியாமையையிட்டு அறிவித்துள்ளது.

- தேசிய கல்வித் தாபனத்திடமிருந்து குறிப்பிடப்பட்ட தொகையைப் பெறுவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆ) 2011 திசெம்பர் 31ஆம் திகதி வழங்கப்பட்ட ரூபா 267,040.93 சதத்திற்கான காசோலையொன்று 2012 ஜனவரி மாதத்தில் கிடைத்துள்ளது. எனவே தற்பொழுது கடன்பட்டோரின் மிகுதி 43,390 ரூபா மாத்திரமே. மிகுதியாக உள்ள மொனராகலை வைத்தியசாலைக்கான 43,390 ரூபாவை வைத்தியசாலை கொடுப்பனவு செய்வதற்கு இணங்கியுள்ளது.

இ) கோரப்பட்ட தொகை இரு தாபனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மற்றைய தாபனங்கள் கோரும் பட்சத்தில் அவர்களது மிகுதியைத் தீர்த்து வைப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

### 2:2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

நிலையான சொத்துக்களின் முகாமைத்துவம் மற்றும் இருப்புக் கட்டுப்பாட்டின் பொருட்டு நிறுவப்பட்டுள்ள மென்பொருள் முறைமையினூடாக அவசியமான தரவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### 2:2.5 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் ஆதியனவற்றைக் கடைபிடிக்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான குறிப்பீடுகள் | கடைப்பிடிக்காமை |
|---|---|
| அ) சட்டங்கள்<br>1964ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க நீர்வளங்கள் சபை சட்டத்தின் 14ஆம் பிரிவு | ஆலோசனைக் குழுவின் கடமையானது 12ஆம் சட்டப் பிரிவில் கூறப்பட்டுள்ள ஏதாவது அல்லது சகல விடயங்களையிட்டும் சபைக்கு ஆலோசனை கூறுவதாகும். 15 அரசாங்கத் தாபனங்களின் தலைவர்கள் அல்லது அதன் பிரதிநிதிகளைக் கொண்டு இச் செயற்குழு ஏற்கனவே செயற்பாட்டில் உள்ளது. |
| ஆ) திறைசேரி சுற்று நிருபங்கள்<br>i) 1978 திசெம்பர் 19ஆம் திகதியிட்ட சுற்று நிருப இலக்கம் 842 | நிலையான சொத்துக்களின் முகாமைத்துவம் மற்றும் இருப்புக் கட்டுப்பாட்டின் பொருட்டு கணினி மென்பொருள் நிறுவப்பட்டுள்ளதுடன் அம்முறையில் தரவுகளைப் பதியும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |
| ii) 2002 நவம்பர் 28ஆம் திகதியிட்ட சுற்றுநிருப இல. IAI/2002/02 | நிலையான சொத்துக்களின் முகாமைத்துவம் மற்றும் இருப்புக் கட்டுப்பாட்டின் பொருட்டு கணினி மென்பொருள் நிறுவப்பட்டுள்ளதுடன் அவ்வமைப்பு முறையில் கணினிகள் மற்றும் கணினி உதிரிப்பாகங்களின் விபரங்கள் பதியப்பட்டுள்ளன. |
| iii) 2003 யூன் 18ஆம் திகதியிட்ட சுற்று நிருப இல.PED/12<br>***பகுதி 4:2.5** | நிலையான சொத்துக்களின் பொருட்டு கணினி மென்பொருளொன்று நிறுவப்பட்டுள்ளதுடன் அவ்வமைப்பில் தரவுகளைப் பதியும் செயற்பாடு நடைபெறுகின்றது. |

**இ) பொது நிர்வாக சுற்றுநிருபங்கள்**

| | |
|---|---|
| i) 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதியிட்ட 41/90 இலக்க சுற்று நிருபத்தின் பகுதி 2.1 | சபையின் வாகனங்களுக்கான எரிபொருள் நுகர்வு ஒவ்வொரு வருடமும் மேற்கொள்ளப்படுகின்றது. |
| ii) 2002 பெப்ரவரி 26ஆம் திகதியிட்ட சுற்றுநிருப இல.01/2002 | சபையின் வாகனங்களில் சபையின் பெயரும் அரசாங்க சின்னமும் பதியப்படுவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

### 2:2.6 வெளிவாரியான கொடுக்கல் வாங்கல்கள்

களப் பயணத்தின் பிரதான நோக்கானது அறிவு வளர்ச்சி, மனப்பான்மை, சாமர்த்தியம் மற்றும் திறமை அடங்கலாக தொழிலாளர்களின் நலன்புரி என்பதுடன் இலங்கையின் வரண்ட பிரதேசங்களில் சபையினால் செயலாற்றப்படும் கருத்திட்டங்களைப் பற்றி அறிதலுமாகும்.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிச் செயற்பாடு

2010ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 2011ஆம் ஆண்டிலும் பயிற்சி முறையிலான துளைபோடும் உத்தியோகத்தர்கள், புவியமைப்பியலாளர், வேதியியலாளர், வாகன ஓட்டிகள், கூலியாட்கள் என சபைக்கு 44 தொழிலாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர். அவர்களது சம்பளங்கள் மற்றும் பிற செலவுகளை சபை கொடுப்பனவு செய்யவேண்டியதாயிற்று. இதற்கு மேலாக எரிபொருள், தொலைபேசி கட்டணங்கள், நீர்க்கட்டணங்கள் என்பனவற்றிலும் சபை மேலதிகச் செலவு மேற்கொள்ளவேண்டி ஏற்பட்டது.

## 4. தொழிற்பாட்டு மீளாய்வு

### 4.1 நிதி மற்றும் பௌதிகச் செயலாற்றுகை

i) ஒவ்வொரு செயற்பாட்டின் பொருட்டும் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு உரிய வேண்டுனருக்கு வழங்கப்பட்டது. வேண்டுநர்கள் மதிப்பீட்டின் மேலான ஒப்புதல் வழங்கிய பின்பே செயற்பாடுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டன.

ii) சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் பொருட்டும் விரிவான மதிப்பீடும் செலவுப் பதிவீடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

iii) ஆராய்ச்சி கருத்திட்டங்களின் கீழ் அடிப்படை ஆய்வின் பிரகாரம் கருத்திட்ட செயற்பாடுகள் மாற்றமடையும். இந்த விடயத்தில், நிலத்தடி நீர் கவனிப்பு வலையமைப்பின் மாதிரியாக்கம் வலுவடைவான நிலையில் உள்ளது. நீர் இறைத்தல் பரிசோதனை மற்றும் மட்டப்படுத்தல் என்பன வலுவடை நிலையின் பின்னர் மேற்கொள்ளப்படும்.

iv) ஏற்பாடு செய்யப்பட்டிருப்பினும், வெளிநாட்டுப் பிரயாணத்திற்கான அவசியம் ஏற்படவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயல் திறமையின்மைகள்

அ) அறவிடப்பட முடியாத சில வரவேண்டியவை பதிவழிக்கப்படுகைக்கு உள்ளடக்கப்பட்டது.

ஆ) பழுது பார்ப்பதற்கு முயற்சிக்கப்பட்டது. ஆனால் தொழல்நுட்ப கோளாறுகள் காரணமாகத் தோல்வியுற்றது.

இ) திறைசேரியின் கொடை கருத்திட்டங்களின் கீழ் 300 பரீட்சார்ந்த துவாரங்கள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் தற்போது கைவசமுள்ள துளைபோடும் எந்திரங்களைக் கொண்டு (பெரும்பாலானவை 30 வருடங்களுக்கும் மேற்பட்ட காலத்தை உடையன) குறிப்பிட்ட குறியிலக்கை எய்துவதற்கு முடியாது போய்விட்டது. இவ் எந்திரங்கள் அடிக்கடி பழுது பார்ப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளன. இவ்விடயம் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டு புதிய துளைபோடும் றிக்குகள் பெறுவதற்கு விண்ணப்பிக்கப்பட்டிருந்தும் இப் பிரச்சிணையை நிவர்த்தி செய்யும் பொருட்டு திறைசேரியினால் எதுவித வழிமுறையும் தரப்படவில்லை. மேற்போந்த பரீட்சார்த்த துழை துவாரங்களை மேற்கொள்வதற்கு சபையால் முடியுமானதாக இருந்திருப்பின் மதிப்பீடு செய்யப்பட்ட முழுத்தொகையும் சபை பாவிக்க முடியும்.

ஈ) i) ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டு நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சிற்கு 2012 மார்ச் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சு இது சம்பந்தமாகச் செயற்படுவதாக அறியக்கிடக்கின்றது.

ii) ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டு நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சிற்கு 2012 மார்ச் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சு இது சம்பந்தமாகச் செயற்படுவதாக அறியக்கிடக்கின்றது.

iii) ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டு நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சிற்கு 2012 மார்ச் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சு இது சம்பந்தமாகச் செயற்படுவதாக அறியக்கிடக்கின்றது. இந்த ஒழுங்கு விதிகள் வலியுறுத்தப்படுவதற்கு இவைகள் அமைச்சினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

iv) மேலே குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிகள் வலியுறுத்தப்படாமல் திட்டங்களைச் செயற்படுத்த முடியாது.

v) தேவையேற்படும் போதெல்லாம் நீர்ப்புவிச்சரிதவியல் செயற்பாடுகள் அரசாங்க திணைக்களங்கள், உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுடனான கூட்டிணைப்புடன் செயலாற்றப்படுகின்றன.

vi) அறிக்கைகள் தேவையேற்படும் போதெல்லாம் பகுத்தாய்வு செய்யப்படுகின்றது.

vii) நாட்டின் நீர்வளங்கள் சம்பந்தமாகக் கருத்திட்டங்களின் சாத்தியக் கூறுகளையிட்டு மதிப்பீடு செய்யும் போது EIA கணிப்புகளுடன் சபை தொடர்பாடுகொள்கின்றது

## 4.3 தொழிலாளர்களின் பணிக்கொடை கொடுப்பனவு

கணக்கினை ஆக்குவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்

## 5. கணக்குப் பொறுப்பும் நல்லாட்சியும்

## 5.1 வரவு செலவுக் கட்டுப்பாடு

நிலத்தடி நீர் ஆய்வுகள் பரீட்சார்த்த துளைத் துவாரங்களை மேற்கொள்வது இதன் பிரதான செயற்பாடு ஆவதுடன் இச்செயற்பாடு சபையின் மிகப் பழைய துளைபோடு றிக்ஸ் உடன் செயலாற்றப்படுகின்றது. இந்த எந்திரங்களின் அதிகூடிய பாவிப்பின் நோக்குடன் வரவு செலவு மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. கருத்திட்டங்களைச் செயலாக்கும்போது இந்த துளைபோடு றிக்ஸ் அடிக்கடி பழுதுபார்ப்பிற்கு உள்ளாக்கப்படுகின்றது. இதனால் எதிர்பார்த்த குறியிலக்குகளை அடைவது கடினமாக உள்ளது. இதன் பலாபலன் மதிப்பீடு செய்யப்பட்ட வரவு செலவில் விலகல் காண்பதாகும். இந்நிலைப்பாட்டையிட்டு திறைசேரியை ஏற்க வைத்து, மூன்று புதிய துளைபோடு றிக்ஸ்கள் மற்றும் அதற்கான உதிரிப்பாகங்களுடனான சபையின் தேவைப்பாட்டையிட்டு அதற்கான கருத்திட்ட பிரேரணையொன்றை தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு 2013ஆம் வருடத்தின் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த உபகரணம் சபைக்கு வழங்கப்படும் பட்சத்தில் விலகலை மிகக் குறைவாக்க முடியும்.

## 5.2 வருடாந்த அறிக்கைகளை அட்டவணைப்படுத்தல்

பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்துவதற்கான செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 6. விதி முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளில் முடியுமான இடங்களில் நற்கட்டுப்பாட்டை கடைப்பிடிப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பந்துல முணசிங்க
தலைவர்
நீர்வளங்கள் சபை.